பக்கங்கள்:14 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 மாசி 20 வெள்ளிக்கிழமை 04.03.2022 கதிர் 119

**இனி இது ரகசியம் அல்ல!**

நடக்கும், நடக்காது என்று இழுபறிப்பட்ட விடயம் கடைசியில் நடந்து விட்டது. விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில்ல ஆகியோரை அமைச்சரவையில் இருந்து தூக்கிக் கடாசும் நடவடிக்கை நீண்ட காலம் எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான். 2

# அமைச்சுப் பதவிகளிலிருந்து விமலும் கம்மன்பிலவும் நீக்கம்



## ஜனாதிபதி கோட்டாபய அதிரடி

விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோரை அமைச்சுப் பதவிகளிலிருந்து அதிரடியாக நீக்கியுள்ளார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ .

விமலும், கம்மன்பிலவும் கடந்த காலங்களில் அரசின் செயற்பாடுகளைக் கடுமையாக விமர்சித்து வந்த நிலையிலேயே, தற்போது அவர்கள் குறித்த பதவிகளிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். 13

## விமலின் கதிரை எஸ்.பிக்கு

### கைத்தொழில் அமைச்சராகப் பதவிப்பிரமாணம்



கைத்தொழில் அமைச்சராக நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் முன்னிலையில் நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் பதவிப்பிரமாணம் செய்து 13

## அமைச்சுப் பதவிகளில் திருத்தம்

### காமினிக்கு எரிசக்தி; பவித்ராவுக்கு மின்சக்தி



விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்மன்பில அமைச்சுப் பதவியிலிருந்து இருந்து நீக்கப்பட்டதை அடுத்து, பல அமைச்சுகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

எரிசக்தி அமைச்சராக காமினி லொக்குகேவும், மின்சக்தி அமைச்சராகப் பவித்ரா தேவி வன்னியாரச்சியும் 2

## மறைந்த ஊடகத்துறை மாணவி தில்காந்திக்கு ஏகாந்த நிலையில் பட்டமும் தங்கப் பதக்கமும்!




யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் 35ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் மாணவி ஒருவருக்கு ஏகாந்த நிலையில் பட்டமும் நினைவுத் தங்கப் பதக்கமும் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடத்தின் ஊடகத்துறையில் சிறப்புக் கலைமாணி பட்டம் பெற்ற செல்வி தில்காந்தி நவரட்ணம், பட்டமளிப்பு விழாவின்போது 13

### பதவி நீக்கக் கடிதத்துக்கு 'நன்றி' என்று

## நகைச்சுவைப் பாணியில் பதிலடி கொடுத்தார் விமல்

அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ள விமல் வீரவன்ஸ, நகைச்சுவைப் பாணியில் பதிலடி கொடுத்துள்ளார்.

கைத்தொழில் அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ள கடிதம் ஜனாதிபதி செயலகத்தால் விமல் வீரவன்ஸவுக்கு நேற்றிரவு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தை தனது முகநூல் பக்கத்தில் பதிவேற்றம் செய்து, 'நன்றி' எனக் குறிப்பிட்டுள்ளார் விமல் வீரவன்ஸ.

## யாழில் மின் தடைக்கு எதிராகப் போராட்டம்

(ந.லோகதயாளன், இ.கலையமுதன்)

மின்சாரத் தடைக்கு எதிர்ப்பு தெரிவித்து மெழுகுவர்த்தி மற்றும் டோர்ச் லைட் ஏந்திய போராட்டம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

நேற்றிரவு 8.30 மணியளவில் ஏ - 9 பிரதான வீதி, நல்லூர் – செம்மணி வளைவுப் பகுதியில் ஒன்றுகூடியவர்களால் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. 13



## புல்வெட்டும் இயந்திரத்துக்குள் சிக்கி கடற்படைச் சிப்பாய் சாவு

(வவுனியா நிருபர்)

புல்வெட்டும் இயந்திரத்துக்குள் அகப்பட்டு வவுனியாவில் கடற்படைச் சிப்பாய் ஒருவர் நேற்று மரணமடைந்தார்.

பூனாவ இராணுவ முகாமில் புல்வெட்டும் இயந்திரம் மூலம் துப்பரவுப் பணிகள் இடம்பெற்றுக்கொண்டிருந்தபோது அதனுள் அகப்பட்டுப் படுகாயமடைந்த கடற்படைச் சிப்பாய் வவுனியா வைத்தியசாலையில் 2

## மூத்த விரிவுரையாளர் விபத்தில் மரணம்




யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் மூத்த விரிவுரையாளர் கனகசபை பாஸ்கரன் நேற்றிரவு இடம் பெற்ற 13

## மட்டக்களப்பிலும் போராட்டம்

மின்சாரத் தடைக்கு எதிராக மட்டக்களப்பிலும் நேற்றிரவு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தலைமையில் கொட்டும் மழைக்கு மத்தியில் பெரியகல்லாறு கோட்டைக் கல்லாறு பாலத்தில் 13





## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
நேற்று முன்தினம் ஆட்சித் தலைமையைத் தாறுமாறாக விமர்சித்து, இருவரும் பகிரங்கமாகப் பேசிய பின்னரும் அவர்களை அமைச்சரவையில் வைத்திருப்பது என்பது மிகச் சிக்கலான விடயமாகத் தான் ஆட்சித்தலைவருக்கு இருந்திருக்கும்.

எது எப்படி என்றாலும், ராஜபக்ஷ சகோதரர்கள் தங்களுக்குள் கலந்துரையாடிய பின்னர் இப்படி இருவரையும் – வீரவன்ஸவையும் உதய கம்மன்பில்லவையும் – வெளியேற்றும் தீர்மானத்தை எடுத்தனர் என அறிய வந்தது. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பெரும் பின்னடிப்புடன்தான் இந்த முடிவுக்குத் தலையசைத்தார் எனவும் தெரிகின்றது.

அவரது இந்தப் பின்னடிப்புக் காரணம் உண்டு. அது குறித்துப் பேசும் போது 2004 முற்பகுதியில் நடந்த ஒரு சம்பவம் எனக்கு நினைவுக்கு வருகின்றது. அரசியல்வாதி மஹிந்த ராஜபக்ஷவுடன் ஒரு பத்திரிகையாளனாக மிகவும் நெருங்கிப் பழகும் வாய்ப்பு அப்போது முதல் கொண்டுதான் – அன்று தொட்டுத்தான் – எனக்குக் கிடைத்தது.

அன்றைய நிகழ்வு எனக்கு இன்னும் நன்றாக நினைவில் நிற்கின்றது. அப்போது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரமர் ரணில் விக்கிமசிங்க. எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ. அச்சமயத்தில் ரணிலின் அரசு, விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சு நடத்திக் கொண்டிருந்தது. பேராசிரியர் பீரிஸ் ஐ.தே.கட்சி அரசில் அமைச்சர். புலிகளுடன் பேச்சு நடத்தும் அரசுக் குழுவின் தலைவர்.

எனது நினைவு சரி என்றால், ரணில் அரசுடன் முரண்பட்ட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தம்பாட்டில் ரணிலின் அரசின் இரு அமைச்சர் பதவிகளைப் பறித்தெடுத்து தம்பாட்டில் – அப்போது எதிர்க்கட்சி வரிசையில் இருந்த சு.கவின் எம்.பிக்களான லக்ஷ்மன் கதிர்காமருக்கும் சரத்அமுனுகமவுக்கும்வழங்கியிருந்தார்.

அந்தச் சமயத்தில்தான் பத்திரிகை ஆசிரியர்களை இரவு விருந்துக்கு அழைத்திருந்தார் ஜனாதிபதி சந்திரிகா. ஜனாதிபதி மாளிகையில் அந்த ஒன்றுகூடல் நடைபெற்றது.

வழமைபோல் ஜனாதிபதி சந்திரிகா ஒன்றரை மணி நேரம் தாமதமாக விருந்துக்கு வந்தார். சுடர் ஒளி பிரதம ஆசிரியராக இருந்த கே.கே.இரத்தினசிங்கத்தையும் நான் கூட்டிச் சென்றிருந்தேன். உயர்ரக பானங்களுடன் விருந்து சூடு பிடித்தது. ஆசிரியர் இரத்தினசிங்கம் வயதில் மூத்தவர். வெள்ளைத் தாடியும் நரைத்த தலைமயிருமாக கம்பீரமாக காட்சியளிப்பார். யாரையும் தூக்கி எறிந்து ஒளிவு மறைவின்றி வெளிப்படையாகப் பேசுவார். வெட்டு ஒன்று துண்டு இரண்டாக நறுக்கென இருக்கும் அவரின் பேச்சு. நேரம் செல்லச் செல்ல பார்ட்டி சூடு அவரிலும் தொற்றிக் கொண்டது. அவர் பேனா பிடித்த பிரபாகரன் போலாகியிருந்தார்.

எதிர்க்கட்சித் தலைவராக இருந்த மஹிந்தவை யாரும் கண்டு கொள்ளவே இல்லை. நேரம் பிந்தி வந்த சந்திரிகா கூட, அவரிடம் 'ஹாய்' தன்னும் சொல்லவில்லை. அவர் பக்கம் திரும்பி ஒரு புன்முறுவலோ, தலையசைப்போ கூட இல்லை. உதாசீனமாக நடந்து கொண்டார்.

ஏனோ நான் மட்டும் மஹிந்தருக்குப் பக்கத்தில் போய் அமர்ந்து கொண்டேன். சுமார் ஒரு மணி நேரம் இருவரும் மனம் விட்டு உரையாடினோம். அதுதான் முதல் சந்திப்பு. அவர் மனதிலும் அது பதிந்து கொண்டது. நான் விடுதலைப் புலிகளின் தலைமைக்கும், மதியுரைஞர் பாலசிங்கத்துக்கும் மிக நெருக்கமான பத்திரிகையாளன் என்பதை கப் என்று பிடித்துக் கொண்டார் அவர். சுமார் ஒன்றரை வருடங்கள் கழித்துத் தாம் ஜனாதிபதியான பின்னர் – பதவியேற்று சுமார் ஒரு மாதத்துக்குப் பின்னர் – என்னை அலரி மாளிகைக்கு அழைத்துப் பேசிய சமயம், அன்றைய முதலாவது சந்திப்பையும், நாங்கள் உரையாடிய விடயங்களையும் நினைவு கூர்ந்தார் ஜனாதிபதி மஹிந்தர். விடுதலைப் புலிகளின் தலைமைக்குச் செய்தி அனுப்பச் சரியான நபர் நீர்தான் என்பதை அன்றே தாம் தீர்மானித்துக் கொண்டார் என்ற தகவலையும் அச்சமயத்தில் அவர் பூடகமாகக் கோடி காட்டினார்.

சரி, மீண்டும் அன்றைய ஜனாதிபதி மாளிகைக் கூட்டத்துக்கு வருவோம். ஜனாதிபதி சந்திரிகா வந்ததும், விருந்துக்கு முந்திய கலந்துரையாடல், ஜனாதிபதி மாளிகையின் உட்புறம் உள்ள முற்றத்தில் மரத்துக்குக் கீழான புல்வெளிக்கு மாற்றப்பட்டது. அந்தப் பாரிய மரத்தின் கீழ் வட்டமாகக் கதிரைகள் அடுக்கப்பட்டிருந்தன. ஒரு பக்கத்தில் சந்திரிகா, லக்ஷ்மன் கதிர்காமர், சரத் அமுனுகம போன்ற சு.கவின் பிரமுகர்கள் போய் அமர்ந்தனர். அதற்கு சரியாக நேர் எதிர்ப்புறத்தில் மஹிந்தர் தனியாளாக இருந்தார். நான் மட்டுமே அவருக்குப் பக்கத்தில். அடுத்தடுத்த கதிரைகள் இரண்டு பக்கமும் வெறுமையாக இருந்தன. மூத்த பத்திரிகை ஆசிரியர்கள் எல்லோரும் ஜனாதிபதிக்கு நெருக்கமாக இருந்து உரையாட விரும்பியிருப்பார்கள் போலும்.

அப்போதுதான் அது நடந்தது. சூட்டில் இருந்து ஆசிரியர் இரத்தினசிங்கம், ஆங்கிலத்தில் சந்திரிகா அம்மையாருக்கு செமத்தியாகக் கொடுக்கத் தொடங்கினார்.

" Madam, why you are disturbing the peace process?" – என்று தொடங்கி வெடிக்கத் தொடங்கினார் அவர்.

சந்திரிகா, கதிர்காமர், அமுனுகம எல்லோருடனும் கொஞ்சமும் கிறங்காமல் வாயடித்தார் இரத்தினசிங்கம். எனக்கும் ஒரு மாதிரியாகப் போய் விட்டது. எழுந்து சென்று ஆசிரியர் இரத்தினசிங்கத்துக்குப் பக்கத்தில் அமர்ந்து, அவரைக் கட்டுப்படுத்துவோம் என்று நினைத்து எழுந்தேன். என்னை மறித்து, மீண்டும் தமக்குப் பக்கத்தில் இருந்த கதிரையில் இருத்தி என்னை அங்கு போக விடாது தடுத்தார் மஹிந்தர்.

"வேண்டாம். அவரை மறிக்க வேண்டாம். அவர் இந்த நாட்டின மூத்த பிரஜை. சமூகத்தின் உயர் நிலைப் பிரமுகர். அவர்தான் வெளிப்படையான சில விடயங்களைப் பேச முடியும், கேட்க முடியும். அவரைத் தடுக்க வேண்டாம். கேட்க விடுங்கள்." – என்றார் மஹிந்தர்.

அன்று இரத்தினசிங்கம் சூடாகக் கொடுத்த விடயங்கள் சுவையானவை. ஆழமான அர்த்தங்கள் கொண்டவை. பிறிதொரு சந்தர்ப்பத்தில் அதனை விவரமாக எழுதுவேன். கட்டாயம் வாசகர்கள் அவற்றை அறிய வேண்டும்.

அச்சமயத்தில்தான் இந்த விமல் வீரவன்ஸவையும் உள்ளடக்கிய ஜே.வி.பி. குறித்து மஹிந்தர் எனக்கு ஒரு கருத்தை முன்வைத்தார். அந்தச் சொல்லாடல்கள் எனக்கு இன்னும் நன்கு நினைவில் உள்ளன.

ஜனாதிபதி சந்திரிகாவைச் சுட்டிக் காட்டி – 'Mad Lady' (பைத்தியக்காரப் பெண்மணி) என்று கூறத் தொடங்கினார் மஹிந்தர்.

இந்தப் பைத்தியக்கார அம்மணி, ஐ.தே.க. அரசை வீழ்த்துவதற்கு ஜே.வி.பியுடன் கைகோர்க்க முயலுகின்றார். சேரும் போது ஜே.விபியினரின் அரசியல் உறவு இனிமையாகத்தான் இருக்கும். ஆனால் முறிய நேர்ந்தால் – உறவு துண்டாகும் போது – அவர்கள் எப்படி மோசமாகத் திருப்பி அடிப்பார்கள் என்பதை இந்த அம்மணி எண்ணிப் பார்க்கவில்லை. வாங்கிக் கட்டும் போதுதான் அவர் உணர வேண்டி நேரும்." – என்று ஏளனத்துடன் கூறினார் அவர்.

சந்திரிகாவின் ஆட்சிக் காலத்தில் ஜே.வி.பி. அவரை விட்டுப் பிரிந்து போகும் நிலைமை ஏற்படவில்லை. அதே ஜே.வி.பியின் ஆதரவையும் வைத்துக் கொண்டுதான் அடுத்த ஆண்டில் – 2005இல் – ஜனாதிபதித் தேர்தலில் வென்றார் மஹிந்தர்.

அதே ஜே.வி.பியில் அப்போது 'பயர் பிராண்ட்' இருந்த விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்மன்பில்ல ஆகியோருடனான உறவைத்தான் ராஜபக்ஷக்கள் இப்போது வெட்டுகின்றார்கள். பிளவின் பின்னர் விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில்ல போன்றோர் கொடுக்கக் கூடிய பதிலடி நடவடிக்கைகளை அரசியலில் அதிக அனுபவம் கொண்ட மஹிந்தர் நன்கு ஊகித்திருப்பார். அதனால்தான் அந்த உறவுமுறிப்புக்குபின்னடிப்புடன்அவர்தலையசைத்திருப்பார் என்று நினைக்கிறேன்.

எது, எப்படியோ நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவைக் கடுமையாக – சரமாரியாக – விமர்சித்த விமலும் உதய கம்மன்பில்லவும் அமைச்சர் பதவியிலிருந்து தூக்கிக் கடாசப்பட்டிருப்பது ஆட்சித் தரப்புக்குள் பஸிலின் கையைப் பலப்படுத்தும் செயற்பாடு என்றே கருதுகிறேன்.

பதவி பறிக்கப்பட்ட விமல் வீரவன்ஸவின் அமைச்சுப் பதவியை தினேஷ் குணவர்த்தனவுக்கு வழங்கவே ஜனாதிபதி விரும்பினார்.

ஆனால் விமல் வீரவன்ஸவிடமிருந்து பிடுங்கப்பட்ட அமைச்சைத் தான் விழுந்தடித்துக் காத்திருந்து ஏற்பவர் போல பெற்றுக் கொள்ள தினேஷ் குணவர்த்தன விரும்பவில்லை.

அதனால் அந்தப் பதவி எஸ்.பி. திஸநாயக்காவிடம் வழங்கப்பட்டது. அமைச்சுப் பதவிக்காகப் பொறுமையுடன் – எல்லாவற்றையும் சகித்துக் கொண்டிருந்த எஸ்.பிக்கு கடைசியில் எதிர்பார்ப்பு சித்தித்துள்ளது.

இப்போதைய அமைச்சரவை மாற்றம் நேற்றைய பூகம்பத்துடன் முடியவில்லை. பூகம்பத்துக்குப் பின்னரான சிறு சிறு அதிர்வுகள் போல இன்னும் ஓரிரு மாற்றங்கள் இருப்பதாகக் கூறப்படுகின்றது. குறிப்பாக விவசாய அமைச்சு எஸ்.எம்.சந்திரசேனவின் கைகளுக்கு மாறக் கூடும். மஹிந்தானந்த அளுத்கமகேக்கு என்ன வழங்கப்படும் எனத் தெரியவில்லை. வரும் போது பார்க்க வேண்டியதுதான்!

– மின்னல் –

---

## அமைச்சுப் பதவி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் நேற்று மாலை ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர்.

ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத்வும் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்.

---

## புல்வெட்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
சேர்க்கப்பட்டார்.

அவர் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டபோதும் சிகிச்சை பலனின்றி மரணமடைந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (100)

JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY

**Director, Jaffna College Institute of Technology Calls for the following courses**

**Civil Draughtperson (one year)**

Minimum Qualification Passed G.C.E.(OL) with pass in Mathematics & English

**Course leads to:**

- Follow courses in level 5
- Register for drawings at local councils

**Computer Certificate Courses**

**(3 - 4 months Part time)**

- Certificate in MS OFFICE - (MS Word, Excel, Access & PowerPoint)
- Certificate in Graphic Designer - (Page Maker, PhotoShop & CorelDraw)
- Web Designing (HTML, CSS, JAVA Script PHP, MYSQL)
- JAVA, C++ Programming

**Foundation in Information Technology**

**(FIT) (6 months part time)**

Pre degree course leads to Bachelor|s in Information Technology (BIT), University of Colombo.

Commencement in the 2nd week of March 2022
The Courses will be conducted
at our Jaffna Centre too
(Jaffna College Undergraduate dept. Building)
464 Hospital Road, Jaffna.
For further details contact
Tel no: 02122509750212223382
Email: ejcitsltnet.lk.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தோற்றுப் போன அரசு

'வரும், வராது' என்று கூறப்பட்டுக் கொண்டிருந்த மின்வெட்டு, எதிர்பார்த்ததை விட வேகமாக வந்து சேர்ந்தது.

ஆரம்பத்தில் இரண்டு, இரண்டரை மணி நேர சுழற்சி முறை மின்வெட்டு என்றார்கள்.

அது ஆரம்பமானபோதே, மின்வெட்டு வராமல் மக்களுக்கு மின் விநியோகத்தை வழங்குங்கள் என்று உயர்மட்டக் கூட்டத்தில் உத்தரவிட்டார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ. ஜனாதிபதி உத்தரவிட்டமையால் மின்வெட்டு நிறுத்தப்படும் என்றே நம்பினோம்.

ஆனால் இரண்டரை மணி நேர மின்வெட்டு எதிர்பார்த்தமையை விட வேகமாக ஏழரை மணி நேரமாக விஸ்தரிக்கப்பட்டது.

இப்போதும் மின்வெட்டு இல்லாமல் மின்விநியோகம் வழங்கப்படும் என்றும், மின்வெட்டுத் தவிர்க்கப்படும் என்றும் ஜனாதிபதி மீண்டும் உறுதி கூறுகின்றார்.

அதேசமயம், தற்போதைய ஏழரை மணி நேர மின்வெட்டு பத்து மணி நேரமாக விஸ்தரிக்கப்படும் என்றும் –

தற்போதைய மின்வெட்டு நெருக்கடி அடுத்த ஒரு மாதத்துக்குள் தீர்வதற்கு வாய்ப்புகள் இல்லை என்றும் –

கொழும்புச் செய்தி நிறுவனங்கள் சில உறுதியாகச் செய்திகளை வெளியிடுகின்றன.

ஜனாதிபதி வெளியிட்டுள்ள உறுதிமொழியை நம்பாத பொதுமக்கள் பின்னதுதான் – மின்வெட்டு பத்து மணி நேரமாக விஸ்தரிக்கப்படுவதுதான் – பெரும்பாலும் அரங்கேறும் என்று அஞ்சுகின்றனர்.

நாட்டில் எரிபொருள் நிலையங்களில் எரிபொருளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை – பற்றாக்குறையை – நோக்கும் போது நிலைமை இப்போதைக்கு சீரடைய வாய்ப்பில்லை என்ற நம்பிக்கையீனமே மக்கள் மத்தியில் பரவலாக ஏற்பட்டுள்ளது.

நாடு வங்குறோத்து நிலையை அடைந்திருக்கின்றது என்பது கண்கூடு. நாட்டை இந்த நெருக்கடியில் இருந்து மீட்கும் மூலோபாயம் ஏதும் ஆட்சித் தரப்பிடம் இருப்பதாகவும் தெரியவில்லை. மாறாக நாட்டு நிலைமையை இன்னும் – மேலும் மேலும் – மோசமாக்கும் செயற்பாடுகளே கட்டவிழ்கின்றன.

சர்வதேசக் கடன்கள், கடப்பாடுகளை செலுத்த முடியாமல் தோற்றுப் போன நாடாக இலங்கை மாறுவது வெகுதூரத்தில் இல்லை என்று சர்வதேசப் பார்வையாளர்கள் சுட்டிக்காட்டத் தொடங்கியுள்ளனர்.

இறைமையுள்ள ஒரு நாட்டின் சட்ட ரீதியான கடப்பாடுகளையும், பொறுப்புகளையும் ஆற்ற முடியாத நிலையை ஒரு நாடு எட்டும் போது அது தோற்றுப் போன நாடாக அறிவிக்கப்படும். அந்தச் சமயத்தில் அந்த நாடு தனது இறைமை தொடர்பான உரிமையைப் பேசும் தகுதியையும் கூட இழக்கின்றது என்பது கவனிக்கப்பட வேண்டியதாகும்.

இலங்கை தனது சர்வதேசக் கடப்பாடுகளை, பொறுப்புகளை நிறைவேற்ற முடியாத நிலையில் அதனை – இலங்கையை – தோற்றுப் போன நாடாக உலக நாடுகள், அறிவிப்பது இரண்டாவது விடயம்.

ஆனால், அதற்கு முதல் இலங்கையின் ஒவ்வொரு பிரஜைக்கும் தான் வழங்க வேண்டிய அடிப்படைக் கடப்பாடுகளை, பொறுப்புக்களை நிறைவேற்றவும், அளிக்க வேண்டிய உரிமைகள், வசதிகளை வழங்கவும் இயலாத அரசு முதலில் தோற்றுப் போன அரசாகப் பிரகடனப்படுத்தப்பட வேண்டும்.

மக்களுக்கு வாக்குறுதிகளை அள்ளி வீசி, வாய்ப்பந்தல் போட்டு, மக்களை நட்டாற்றில் கொண்டு வந்து விட்டிருக்கும் இந்த அரசு தோற்றுப் போன அரசுதான். அந்த உண்மையைப் பிரகடனப்படுத்தினால்தான் அந்த நெருக்கடியிலிருந்து மீண்டு வெளிவருவதற்கான வாய்ப்பைப் பற்றி சிந்தித்து வெளியே வரலாம்.

# தலைமன்னாரில் மறைத்து வைக்கப்பட்ட ஒரு தொகுதி மாத்திரைகள் மீட்கப்பட்டன!



தலைமன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நடுக்குடா காட்டுப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு தொகுதி மாத்திரைகளை இராணுவத்தினர் நேற்று (வியாழக்கிழமை) அதிகாலை மீட்டுள்ளனர்.

மன்னார் இராணுவ புலனாய்வாளர்களுக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில், நடுக்குடா இராணுவத்தினரின் உதவியுடன் நேற்று அதிகாலை நடுக்குடா காட்டுப்பகுதியில் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் இரண்டு பெட்டிகள் கண்டுபிடிக்கப் பட்டு சோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது ஒரு தொகுதி மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன.

சோதனையின்போது கண்டுபிடிக்கப்பட்ட மாத்திரைகள் உடல் வலியைக் குறைப்பதற்கு பயன்படுத்தப்படுபவை எனத் தெரியவந்துள்ளதோடு, சோதனை செய்த இரு பெட்டிகளில் இருந்து 60 ஆயிரம் மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன.

இந்த மாத்திரைகள் இந்தியாவில் இருந்து கடல் மார்க்கமாகக் கொண்டு வரப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை என இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். மீட்கப்பட்ட மாத்திரைகள் மேலதிக நடவடிக்கைகளுக்காகத் தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# கடும் பொருளாதாரத் தடைகளை எதிர்நோக்கியுள்ள ரஷ்யாவிடம் கடனுதவி கோரியது இலங்கை அரசு!

ரஷ்யாவிடம் 30 கோடி அமெரிக்க டொலர்களை இலங்கை அரசாங்கம் கடனாக கோரியுள்ளது.

எரிபொருள், எரிவாயு மற்றும் நிலக்கரியை கொள்வனவு செய்வதற்காகவே இவ்வாறு கடனுதவி கோரப்பட்டுள்ளது.

ரஷ்யாவிற்கும், உக்ரைனுக்கும் இடையில் போர் இடம்பெற்று வரும் நிலையில், பல்வேறு நாடுகளும் ரஷ்யாவிற்கு எதிராகக் கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன.

இவ்வாறு கடுமையான பொருளாதார நெருக்கடிகளை சந்தித்துள்ள ரஷ்யாவிடமே இலங்கை அரசாங்கம் 30 கோடி அமெரிக்க டொலர்களைக் கடனாகக் கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மின்வெட்டு நேரத்தில் திருட்டுகள் அதிகரிப்பு

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கடந்த சில நாள்களாக திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

குறிப்பாக கடந்த இரண்டு வாரங்களில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவங்களில் அதிகமானவை, மின்சாரம் துண்டிக்கப்பட்டபோது இடம்பெற்றவை என்பது கண்டறியப்பட்டுள்ளது என பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மின்சாரம் துண்டிக்கப்படும்போது பல இடங்களில் பொருத்தப்பட்டுள்ள சிசிரிவி கமராக்கள் செயலிழப்பதும் திருட்டு அதிகரிக்கக் காரணம் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாணந்துறை ஹொரேதுடுவ பிரதேசத்திலுள்ள விகாரையொன்றில் சில தினங்களுக்கு முன்னர் மின்சாரம் துண்டிக்கப்பட்ட நேரத்தில் திருட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

விகாராதிபதியின் அலுவலக அறையிலுள்ள தங்க தாயத்து மற்றும் பெறுமதிமிக்க பொருள்கள் திருடர்களால் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

விஹாரையில் சிசிடிவி கமராக்கள் பொருத்தப்பட்டிருந்தாலும் அந்தச் சந்தர்ப்பத்தில் மின்வெட்டு அமுலில் இருந்ததால் கமராக்கள் செயலிழந்திருந்தன எனக் குறிப்பிடப்படுகின்றது.

# எதிர்வரும் 4 வாரங்களுக்கு பின்னர் மருந்து பொருள்களுக்கு தட்டுப்பாடு

## விடுக்கப்பட்டது எச்சரிக்கை

நாட்டில் எதிர்வரும் 4 வாரங்களுக்கு பின்னர் அதிகளவிலான மருந்துப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படக் கூடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஔடத ஒன்றியத்தின் தலைவர் ஏ.ஜே.பஸ்நாயக்க இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவும் டொலர் தட்டுப்பாடு காரணமாக மருந்துப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கான நாணயக் கடிதங்கள் விடுவிக்கப்படாமையால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# உங்கள் அடையாளம் தான் நீங்கள் யாரென்று தீர்மானிக்கிறது

**Golden Look Beauty Care & Academy அழுகுக்கலை நிறுவனத்தின் உரிமையாளர் நிதர்சனா டிலக்ஷன் உடனான நேர்காணலிது.**



நிதர்சனா டிலக்ஷன்
உரிமையாளர்
Golden Look Beauty Care & Academy
அழுகுக்கலை நிறுவனம்

### » உங்களைப் பற்றிய அறிமுகம்

நான் நிதர்சனா டிலக்ஷன். நானொரு அழகுக்கலை நிபுணர். 2011 ஆம் ஆண்டு அழகுக் கலைத்துறையை கற்கும்போதே சில சில வேலைகளை பொறுப்பேற்று சிறிய சுயதொழிலாக செய்து வந்தேன். பின்னர் Golden Look Beauty Care & Academy அழுகுக்கலை நிறுவனத்தை ஆரம்பித்து உரிமையாளராக கடமையேற்றேன். எனது அழகுக்கலை நிலையத்தில் சாதாரண ஒப்பணைகள் தொடங்கி சிறப்பு மணப்பெண் அலங்கார ஒப்பணைகள் வரை மேற்கொள்ளப்படுகிறது. அத்தோடு அழுகுக்லை கற்கை நெறியையும் எனது மாணவர்களுக்கு கற்றுக்கொடுக்கின்றேன். தற்போது 10 வருடங்களுக்கு மேலாக இந்த அழகுக் கலைத்துறையில் ஈடுபட்டுவருகின்றேன். எனது இத்தனை கால அனுபவத்தில் அண்ணளவாக 500 இற்கும் மேற்பட்ட பெண்களுக்கு அழுகுக்கலையை கற்றுக் கொடுத்துள்ளேன். இதை எண்ணி நான் மகிழ்ச்சிகொள்கின்றேன்.

### » அழுகுக்கலைத் துறையில் எப்படி ஆர்வம் வந்தது?

அழுகுக்கலையென்பது சிறுவயதிலிருந்தே எனக்கு பிடித்தமானதொன்று. அழுகுக்கலையில் எத்தனையோ ஆழமான விடயங்கள் உள்ளன. அவற்றை எல்லாம் ஆராய்ந்து படித்து தெரிந்து கொண்டு அதைப் பிரயோகப்படுத்துவது எனக்கு மிகவும் பிடிக்கும். இதனாலேயே அழுகுக்கலைத்துறையை கற்கவேண்டுமென்ற எண்ணத்தோடு என் ஆர்வமும் அதிகரித்தது. அழுகுக்கலையின் ஆரம்ப அடிப்படை கற்கையை இலங்கையில் கற்றேன். பின்னர் தென்னிந்தியாவில் அழுகுக்கலைக்கு பெயர்போன Dr.வசுந்தரா அவர்களிடம் அழுகுக்கலையை கற்று International Diploma in Beauty Therapy & Hair Dressing கற்கை நெறியை பூர்த்தி செய்தேன். பின்னர் இலங்கைக்கு வந்து வீட்டிலேயே நான் படித்ததை வைத்து மற்றவர்களுக்கு ஒப்பணை செய்ய ஆரம்பித்தேன். 2014 ஆம் ஆண்டு Oriflame நிறுவனத்தின் யாழ்ப்பாண கிளைக்கு அழுகுக்கலை கற்கையை கற்பிக்க விரிவுரையாளர்கள் தேவை என்ற பத்திரிகை விளம்பரத்தை பார்த்து அதற்கு விண்ணப்பித்தேன். பிறகு நேர்முகத்தேர்விற்கு சென்று நான் தெரிவுசெய்யப்பட்டேன். ஒரு வருடகாலமாக விரிவுரையாளராக இங்கு பணியாற்றினேன். அந்த அனுபவம் தான் 2015 ஆம் ஆண்டு எனது சொந்த அழுகுக்கலை நிலையத்தை ஆரம்பிக்க காரணமாய் இருந்தது.

### » இத்துறையில் நீங்கள் எதிர்நோக்கும் சவால்கள் என்ன?

அழுகுக்கலைத் துறை என்பது தற்போது போட்டி நிறைந்த ஒரு துறையாகவே மாறியுள்ளது. முன்னர் ஊருக்கு ஒரு சலூன் என்று இருந்தது தற்போது வீதிக்கு ஒரு சலூன் என்றாகி விட்டது. முன்னரை விட தற்போது அழுகுக்கலை துறையில் போட்டி அதிகரித்துள்ளது. இது எனக்கான ஒரு சவாலாகவே இருக்கிறது. இதனை சமாளிக்க நான் எப்போதும் Update ஆக இருக்க வேண்டும். இதற்காக நான் நிறைய பயிற்சிப் பட்டறைகளை மேற்கொண்டேன். ஆரம்பத்தில் கற்றுக்கொண்ட கற்கைகளை மட்டுமே வைத்து இந்த துறையில் நிலைத்து நிற்க முடியாது. முடிந்தவரை நவீன காலத்திற்கு ஏற்றாற் போல என்னுடைய அழுகுக்கலையில் புது புது விடயங்களை உள்வாங்கி தனித்துவமாக செயற்பட்டு இன்னும் எனது பெயரை நிலைநாட்டி வருகின்றேன்.

### » அழுகுக்கலைத்துறையில் உங்களுக்கு கிடைத்த வாய்ப்புகளும் நீங்கள் அடைந்த சாதனைகளையும் பற்றி ஒரு சில..

நான் கூறியது போல ஆரம்பத்தில் அழகுக் கலைத்துறையென்பது போட்டி குறைந்த துறையாக இருந்தமையால் அந்த சமயத்தில் நம்மை தேடி பல வாய்ப்புகள் வந்தன. உதாரணமாக கூறினால் ஒரு நாளைக்கு 4 , 5 மேற்பட்ட மணப்பெண் அலங்கார ஓர்டர்கள் வரும். இப்படி அதிக எண்ணிக்கையிலான ஓர்டர்கள் வந்தாலும் கூட அதனை நிறுத்திவைக்காமல் முடிந்தவரை சிறப்பாக செய்து முடித்ததன் பலன்தான் இன்று எனக்கு பல வாய்ப்புகளை பெற்றுக்கொடுத்துள்ளது என்று கூற வேண்டும். கற்கையோ அல்லது தொழிலோ எனக்கு நிறைய வழிகளில் வாய்ப்புகள் என்னை தேடிவந்த தென்றே கூறவேண்டும். எனக்கு கிடைக்கும் சிறு வாய்ப்பை கூட நான் சரியாக பயன்படுத்துவதில் எச்சரிக்கையாகவும் கவன மாகவும் இருப்பேன். இந்த அழகுக் கலைத்துறையில் என் பயண த்தை ஆரம்பித்த காலத்திலிருந்து இன்று வரை நான் கடந்து வந்த நல்ல அனுபவங்களையும் கிடைத்த வாய்ப்புகளையுமே சாதனையாக பார்க்கின்றேன். இந்தியாவிற்கு சென்று அழகுக் கலைத்துறையை கற்று சர்வதேச அழுகுக்கலை அங்கீகார சான்றிதழை பெற்றுக் கொண்டமை, Oriflame நிறுவனத்தில் விரிவுரையாளராக பணியாற்றியமை, NVQ4 அழுகுக்கலை கற்கை மற்றும் சாமுத்ரிகா Beauty Studio வின் மாஸ்டர் கற்கையை பூர்த்தி செய்தமை, 2017 இல் Jaffna Beautician Association இன் செயலாளராக இருந்தமை, 500 இற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு அழுகுக்கலைத்துறையை முழுமையாக கற்றுக் கொடுத்தமை இவையெல்லாம் படிப்படியான எனது சாதனைகள் என்றே கூறவேண்டும். எவ்வாறாயினும் இவற்றின் மூலம் எனக்கு கிடைத்த வாய்ப்பையும் அனுபவத்தையும் என்னால் மறக்கமுடியாது.

### » சாதிக்க நினைக்கும் பெண்களுக்கு நீங்கள் கூற நினைப்பது.

வெளியுலகில் ஜெயிப்பதற்கு முன் பெண்கள் தன்னை தானே ஜெயிக்க வேண்டும். தம்முடைய தேவைகளை பூர்த்தி செய்வதற்கு இன்னொருவரை எதிர்ப்பார்த்து இருக்கும் நிலையை மாற்ற வேண்டும். விபரம் தெரிந்த வரையில் நமது பெற்றோர், சகோதரர்களை எதிர்பார்த்து வாழலாம். ஆனால் ஒரு கட்டத்தில் அவர்கள் நமக்கு செய்ததை நாங்கள் அவர் களுக்கு திருப்பி செய்யவேண்டும். இதற்காக நமக்கானதொரு சுயதொழில் இருக்கவேண்டும். ஒவ்வொரு பெண்ணும் மற்ற பெண்களுக்கு முன்னுதாரணமாய் வாழ்ந்து காட்ட வேண்டும். உங்கள் அடையாளம் தான் நீங்கள் யாரென்று தீர்மானிக்கிறது. வீட்டிலிருக்கும் அன்றாட கடமைகளை நாளாந்தம் செய்து வாழ்நாளை கழிப்பதனால் நமக்கான தொரு அடையாளம் உருவாகாது. அன்றாட கடமைகளை கவனிப்பதை போலவே நம் திறமையின் பக்க மும் கவனம் செலுத்த வேண்டும்.அதை வெளியுலகிற்கு காட்டவேண்டும்.நம் மிடமுள்ள திறமையின் மூலமே நாம் இந்த மண்ணில் பதியப்படுகிறோம். எந்த துறையில் திறமையும் ஆர்வமும் இருக்கிறதோ அந்த துறையை தேர்ந்தெடுந்து கடின உழைப்பும், விடாமுயற்சியோடும் முன்னேறி தனித்துவமாய் விளங்கவேண்டும்.







# எரியும் பிரச்சினையாக எரிபொருள் தட்டுப்பாடு

**- ந.லோகதயாளன் -**

நாட்டில் தற்போது நிலவும் எரிபொருள் தட்டுப்பாட்டினால் சகல சேவைகளும் ஸ்தம்பிதம் அடையும் நிலைமை ஏற்பட்டுள்ளதாக துறைசார் தொழிலாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

**மீனவர் பிரதிநிதி**

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை தொடர்பில் வடமராட்சி மீனவர் சங்க சமாசத் தலைவர் வர்ணகுலசிங்கம் கருத்து தெரிவிக்கையில் –



இலங்கை முழுவதும் எரிபொருளிற்கு தட்டுப்பாடு நிலவினாலும் யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் அதிக நெருக்கடி தற்போது நிலவுகின்றது. இதில் மீனவர்களும் விவசாயிகளும் தற்போது அதிக நெருக்கடியைச் சந்திக்கின்றோம்.

கடற்றொழிலிற்குச் செல்லும் மீனவன் தொழில் முடிந்து வந்து நித்திரைக்குச் செல்ல முடியாமல் எந்த எரிபொருள் நிலையத்தில் இன்று மண்ணெண்ணை இருக்கின்றது என்பதைத் தேடி அலைய வேண்டிய நிலைமையே காணப்படுகின்றது. பல மீனவர்கள் ஒரு நாள் தொழிலிற்குச் சென்றால் மறுநாள் எண்ணை தேடி அலைகின்றனர்.

வடமராட்சியை பொறுத்தமட்டில் வல்வெட்டித்துறையில் ஊறணிச் சந்தியில் ஒன்றும், நெடியகாட்டில் ம.எண்ணை மட்டும் விற்பனை செய்யும் நிலையமும், பருத்தித்துறையில் முதலாம் கட்டையிலும், கொட்டடியிலும் ஒவ்வொன்றும் தாளையடியில் ஒன்றும் என மொத்தம் 5 எரிபொருள் விற்பனை நிலையங்களே உள்ளன.



இதிலே தாளையடி எரிபொருள் விற்பனை நிலையத்தில் எரிபொருள் தீர்ந்தால் வடமராட்சி கிழக்கு மற்றும் பருத்தித்துறையில் அதிக நெருக்கடி ஏற்படுகின்றது. எனவே இவற்றைக் கருத்தில்கொண்டு எமக்கான எரிபொருளை தடையின்றிப் பெற்றுக் கொள்ள உரியவர்கள் ஆவன செய்ய வேண்டும். – என்றார்.

**விவசாயிகளின் நெருக்கடி**

இந்த விடயம் தொடர்பில் யாழ். மாவட்ட கமக்கார அமைப்புத் தலைவர் கந்தையா தியாகலிங்கம் தெரிவிக்கையில் –

டீசல் இன்மையால் உற்பத்தி காரணமாக உற்பத்திப் பொருள்களை எடுத்துச் சென்று சந்தைப்படுத்த முடியவில்லை. தோட்டத்திற்கு நீர் பாய்ச்ச மின்சாரம் இல்லை, நீர் இறைக்கும் இயந்திரத்திற்கு மண்ணெண்ணை இல்லை, இதனாலேயே எமது விவசாய உற்பத்திகள் அழிவடையும் அபாயம் காணப்படுகின்றது. தற்போது யூரியாவை 20 ஆயிரம் ரூபாபடியும் அமோனியாவை 10 ஆயிரம் ரூபாபடியும் வாங்கி விவசாயத்தில் இறங்கியுள்ள நிலையில் இந்த நிலைமை என்றால் விவசாயிகள் தற்கொலை செய்யும் அவலம் ஏற்படுமோ என்ற ஐயம் ஏற்படுகின்றது. அவ்வாறு ஒரு துயரம் இடம்பெற முன்பு மாவட்ட அரச அதிபர் தலையிட்டு உரிய ஏற்பாட்டைச் செய்து தர வேண்டும். – என்றார்.

**வர்த்தகர் சங்க முயற்சி**

எரிபொருள் நெருக்கடி தொடர்பில் யாழ். மாவட்ட வர்த்தக சங்கத் தலைவர் ஜெயசேகரம் தகவல் தெரிவிக்கையில் –

தற்போதைய எரிபொருள் நெருக்கடியால் இது வரை நீண்ட நேரம் காத்திருந்து எரிபொருளை பெற்றுக்கொள்ளும் நிலைமை காணப்படுகின்றது. இனி வரும் நாள்களில் மேலும் நெருக்கடி ஏற்பட்டால் எரிபொருள் விநியோகம் தடைப்படும். தடைப்பட்டால் குடாநாட்டிற்கான அத்தியாவசியப் பொருள்களைப் பெறுவதில் தடங்கல் ஏற்படாமல் இருப்பதனை உறுதி செய்ய மாவட்ட அரச அதிபரைத் தொடர்புகொண்டுள்ளோம் என்றார்.

**போக்குவரத்துச் சிக்கல்**

வடக்கு மாகாண தனியார் பஸ் சங்கத் தலைவரான சிவராசா சிவபரன் எரிபொருள் நெருக்கடி தொடர்பில் கருத்து தெரிவிக்கையில் –

வடக்கு மாகாணத்தில் தற்போது ஆயிரத்து 80 பஸ் உள்ளபோதும் தற்போது 500 பஸ்களே சேவையில் ஈடுபடுகின்றன. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பஸ்களின் எண்ணிக்கை அதிகம் என்பதனால் நெருக்கடியும் அதிகமாகவுள்ளது. சில இடங்களில் கானில் எரிபொருள் வழங்க மறுப்பதனால் பஸ்களை எடுத்துச் சென்று வரிசையில் நிறுத்த வேண்டியுள்ளது. அதற்கும் ஒரு பகுதி எரிபொருள் வீணாகின்றது என்றார்.



இவை தொடர்பில் பெற்றோலியக் கூட்டுத் தாபன அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, இந்த நெருக்கடி இரண்டொரு தினங்களிற்கு மட்டுமே நீடிக்கும், தற்போதைய சூழலில் நெருக்கடி விரைவில் தீர்ந்துவிடும் எனப் பதிலளித்தார்.

# ஜெனிவா மனித உரிமைப்பேரவை இம்முறையாவது தீர்வு வழங்குமா?

## காணாமல் போனோர் உறவுகள் கேள்வி




இம்முறை இடம்பெறும் ஜெனிவா மனித உரிமை பேரவை அமர்விலாவது எமக்கான நீதி கிடைப்பதற்கு வழிபிறக்கவேண்டும் என்று வவுனியா மாவட்ட வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கம் தெரிவித்துள்ளது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தால் நேற்று வியாழக்கிழமை வவுனியா பழைய பஸ் நிலையத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. ஆர்பாட்டத்தின் பின்னர் கருத்து தெரிவித்த போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்கள்–

எமது உறவுகள் காணாமல் ஆக்கப்பட்டு பத்து வருடங்கள் கடக்கின்ற நிலையில் எமக்கான நீதி தொடர்ச்சியாக மறுக்கப்பட்டுவருகின்றது. தொலைத்த எமது பிள்ளைகளைக் காணாமல் சாட்சிகளான பல தாய்மார்கள் மரணித்துவிட்டனர். வயது முதிர்ந்த நிலையில் அடுத்த போராட்டத்துக்கு வருவோமா என்ற நம்பிக்கை அற்றநிலையில் இந்தப்போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம்.

இலங்கையில் இனப்படுகொலை தொடர்ச்சியாக இடம்பெறாமல் தடுக்கப்படவேண்டுமானால் ராஜபக்ஷ குடும்பமும், இனப்படுகொலைகளுக்கு பொறுப் பாக இருந்த படைத் தளபதிகளும் சர்வதேச குற்றவியல் நீதி மன்றில்நிறுத்தப்படவேண்டும். யுத்தகாலத்தில் மரணித்த இராணுவ உடல்களைப் பொறுப்பெடுக்க மறுத்த சிங்கள அரசு, அவர்களை காணாமல் ஆக்கப் பட்டோர் எனத் தெரிவித்து அவர்களின் குடும்பங்களை ஏமாற்றுகின்றது.

எனவே, சர்வதேச சமூகம் எமக்கான நீதியை விரைவில் வழங்கவேண்டும். இம்முறை இடம்பெற்று வரும் ஜெனிவா மனித உரிமைப்பேரவை அமர்விலாவது உறுதியான தீர்மானங்கள் எடுக்கப்பட்டு எமக்கான நீதிநிலைநாட்டப்படவேண்டும். அதற்கு உறுப்பு நாடுகள் அனைத்தும் ஒத்துழைக்க வேண்டும்.

எமக்கான நீதி கிடைக்கும் வரையில் நாம் எமது போராட்டங்களை தொடர்ச்சியாக முன்னெடுத்து வருவோம். – என்றார்.

# எதிர்வரும் நாள்களில் வடக்கில் கனமழை

வடக்கில் எதிர்வரும் நாள்களில் கன மழைக்கு வாய்ப்புள்ளதால், மீனவர்கள் கடலுக்குச் செல்வதில் அவதானமாக இருக்குமாறும், வெங்காயம் மற்றும் சிறு தானிய செய்கையாளர்கள் விதைத்தல் மற்றும் அறுவடை செயற்பாடுகளைத் தவிர்த்து கொள்வது சிறந்தது எனவும் யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியற்துறை மூத்த விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ள அவர்–

வங்காள விரிகுடாவில் இலங்கைக்கு தென்கிழக்கே உருவான காற்றழுத்த தாழ்வு நிலை தற்போது ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு நிலையாக மாற்றமடைந்துள்ளது. இது மேற்கு வடமேற்கு திசை நோக்கி நகரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனால் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் பரவலாக மிதமான மற்றும் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரை வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் பரவலாக கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

தற்போதைய நிலைமைகளின் படி இதன் மிகச் சரியான நகர்வுப் பாதையை கணிக்க முடியாதுள்ளது. எனினும் சில மாதிரிகள் இந்த தாழமுக்கம் வடக்கு மாகாணத்தின் கரையோரத்தை அணமித்தேநகரும்எனக்காட்டுகின்றன.

அவ்வாறாயின் வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளும் வேகமான காற்று மற்றும் இடி மின்னலுடன் கூடிய கனமழையைப் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டம் வடக்கு மாகாணத்தின் ஏனைய பகுதிகளை விட சற்று கூடுதலான அளவு மழையைப் பெற வாய்ப்புள்ளது.

இலங்கையின் தென்கிழக்கு, கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களின் கடற்பகுதிகள் கொந்தளிப்பான நிலைமையில் காணப்படும் என்பதால் மீனவர்கள் கடலுக்குச் செல்வதில் மிகுந்த அவதானமாக இருப்பது அவசியமாகும். விவசாயிகள் குறிப்பாக வெங்காயம் மற்றும் சிறுதானிய செய்கையாளர்கள் எதிர் வரும் செவ்வாய்க்கிழமை வரை அறுவடை மற்றும் விதைத்தல் செயற்பாடுகளை தவிர்த்துக் கொள்வது சிறந்தது. – எனத் தெரிவித்துள்ளார்.

# ரஷ்யாவுக்கு எதிராக ஐ.நாவில் பிரேரணை!

## இலங்கை நடுவுநிலைமை




ஐக்கிய நாடுகள் சபையில் ரஷ்யாவிற்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட பிரேரணை மீதான வாக்கெடுப்பில் இலங்கை நடுநிலை வகித்துள்ளது.

உக்ரைனில் இருந்து ரஷ்யப் படைகளை முழுமையாக அகற்றுமாறு கோரும் பிரேரணை ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இலங்கை, இந்தியா, சீனா, பாகிஸ்தான் உள்ளடங்களாக 35 நாடுகள் வாக்களிப்பில் பங்கேற்காமல் நடுநிலை வகித்துள்ளன.

ரஷ்யா, பெலாரஸ், வட கொரியா, சிரியா, எரித்திரியா ஆகியன நாடுகள் மேற்படி பிரேரணைக்கு எதிராக வாக்களித்திருந்தன. எனினும், 141 நாடுகள் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்திருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

# தொடர் மின்தடைக்கு எதிராக மட்டக்களப்பிலும் மெழுகுவர்த்தி மற்றும் டோர்ச்லைட் ஏந்தி எதிர்ப்பு

நாட்டில் தொடர்ச்சியாக அமுல்படுத்தப்பட்டு வரும் தொடர் மின்தடைக்கு எதிராக மெழுகுவர்த்தி மற்றும் டோர்ச் லைட் ஏந்தி எதிர்ப்புநடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்புகோட்டைக்கல்லாறு மற்றும் பெரிய கல்லாறுக்கு இடைப்பட்ட பாலத்தில் நேற்று(வியாழக்கிழமை) இரவு 8.30 மணிக்கு இந்த எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இது தொடர்பாகத் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்றஉறுப்பினர் இரா.சாணக்கியன் தனது முகப்புத்தகத்தில் பதிவிட்டுள்ளார்.

தற்பொழுது நாட்டில் பரவலாக பல மணிநேர மின்சாரத் தடை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படுகின்றது. இதனால் மக்கள் அன்றாடம் பல பாதிப்புக்களுக்கு உள்ளாகின்றார்கள்.

இதனை எதிர்க்கும் முகமாக நேற்று 8.30 மணிக்கு கோட்டைக்கல்லாறு மற்றும் பெரிய கல்லாறுக்கு இடைப்பட்ட பாலத்தில் அனைத்து மக்களும் தங்களது எதிர்ப்பை வெளிக்காட்டும் முகமாக மெழுகுவர்த்தி மற்றும் டோர்ச் லைட் சகிதமாக வருகை தந்து தங்களது எதிர்ப்பை வெளிக்காட்டினர்.

# முழங்காவில் குடும்பத்துக்கு கறவைப் பசு மாடு வழங்கல்





யாழ் புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் கனடாவில் வாழ்ந்து வந்து அமரத்துவமடைந்த அமரர் ஜீவாதரன் சிவலோகநாதனின் 46 ஆவது பிறந்தநாளிலும் 110 ஆவது நாள் நினைவும் அண்மையில் நடைபெற்றது.

இந்தத் தினங்களை முன்னிட்டு கிளிநொச்சி முழங்காவில் விநாயகர்புரத்தில் வறுமைக் கோட்டில் வாழ்ந்திடும் சங்கரப்பிள்ளை குடும்பத்தினருக்கு கறவைப் பசு மாடு வழங்கி வைக்கப்பட்டது.

கனடாவைச் சேர்ந்த திருமதி கலைரூபி ஜீவாதரனின் நிதிப்பங்களிப்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்தியகுழு உறுப்பினர் கலாநிதி அகிலன் முத்துக்குமாரசுவாமி பயனாளியைத் தெரிவுசெய்து கறவைப் பசுவை வழங்கி வைத்தார்.

# கிணற்றில் போட்ட கல்

## அக்கரை / அக்கறை அலசல்



என்.சத்தியமூர்த்தி

அண்மையில், தமிழ் தேசியக் கூட்டமைப்புப் பேச்சாளர் சுமந்திரனும், உலகத் தமிழர் பேரவையின் சுரேன் சுரேந்திரனும் சேர்ந்து, தமிழ் நாடு முதல்வர் ஸ்டாலினை வானளாவப் புகழ்ந்து வெளியிட்ட அறிக்கை கிணற்றில் விழுந்த கல்லாக முடிந்துள்ளது. இதற்கு முன்னர், பிற கூட்டமைப்புத் தலைவர்களும் வேறு சில இலங்கைத் தமிழர் தலைமைகளும் அனுப்பிய சமிக்ஞைகளுக்கும் கூட தலைநகர் சென்னையில் இருந்து எந்தவித ரியாக்ஷனும் இருந்ததாகத் தெரியவில்லை. இதுவே, புலம்பெயர்ந்த இலங்கை தமிழ் அமைப்புகளின் நிலைமையும்.

பேச்சுக்கு வேண்டுமென்றால், சுமந்திரன் – சுரேன் இருவர் அணி, ஸ்டாலினுக்கு நேரடியாக கடிதம் ஒன்றும் அனுப்பவில்லை, எனவே அதற்கு அவரிடம் இருந்து எந்தவித பதிலையும் எதிர்பார்க்க முடியாது என்று கூறலாம். ஆனால், சூடு பட்ட பூனை மீண்டும் பால் கிண்ணத்தின் அருகில் வராது. இதுவே உலக நீதி. அந்த வகையில், தந்தையார் கருணாநிதியை எள்ளி நகையாடி விட்டு, நித்தமும் நிந்தித்து விட்டு, இப்போது, ஸ்டாலின் துதி பாடினால் அவர் மயங்கி விடுவார் என்று யாராவது நினைத்தால், அவர் இலங்கை தமிழராகவோ, அல்லது புலம்பெயர்ந்தோரில் ஒருவராகவே தான் இருக்க முடியும்.

இது, ஸ்டாலினின் பழி வாங்கும் நடவடிக்கை அல்ல. மாறாக, இது அவர் தனக்குள்ளே பூட்டிக் கொண்ட ஓர் எச்சரிக்கை மணி. மிதவாதிகளாகட்டும், அல்லது போராளி குழுக்களாகட்டும், அவர்கள்



ஸ்டாலின்

தமிழ் நாடு அரசியல் கட்சிகளையும், தலைமைகளையும், மக்களையும் கூட, தங்களது நியாயமான இனம் சார்ந்த உள்நாடு மற்றும் சர்வதேசம் சார்ந்த அரசியலுக்கும் கூட, பகடை காயாக மட்டுமே பயன்படுத்தி வந்துள்ளார்கள். இது, புதிய விடயம் அல்ல. ஆனால், அவர்கள் குறித்த தெளிவு தமிழ் நாட்டின் திராவிட அரசியல் தலைமைகளுக்கு தற்போது தான் வந்திருக்கிறது.

கடந்த காலங்களில், கருணாநிதி – எம்.ஜி.ஆர்., கருணாநிதி – ஜெயலலிதா போட்டி அரசியலில், குறிப்பாக விடுதலைப் புலிகள் இயக்கம் குளிர் காய்ந்தது. அதுவே, ஒரு விதத்தில் மிதவாத, இலங்கை தமிழர் அரசியல் தலைமைகளுக்கும் பொருந்தும். அடுத்தடுத்து, அந்த இரு தலைவர்களின் மறைவிற்கு பின்பு, அத்தகைய ஏட்டிக்கு போட்டி அரசியலும் தமிழ் நாட்டில், ஓரளவிற்கு மட்டுமாவது முடிவிற்கு வந்திருக்கிறது. இது, இனப் பிரச்சினை மட்டும் குறித்த விடயம் அல்ல. பிற கொள்கை ரீதியான, தமிழ் நாடு மற்றும் இந்தியா சார்ந்த பிரச்சினைகளுக்கும் பொருந்தும்.

ஆனால், இனப் பிரச்சினை தொடர்பில் தமிழ் நாடு அரசியல் தலைமைகளின் தற்போதைய விழிப்புணர்வு குறித்த அறிவு, யாழ்பாணத் தமிழர் தலைமைகளைச் சென்றடையவில்லை என்றே எண்ணத் தோன்றுகிறது. அதனால்தான் அவர்கள் தொடர்ந்து இல்லாத ஊருக்கு வழி தேடி வருகிறார்கள். அதுவும் ஒருவருக்கு தெரியாமல் மற்றவர் இத்தகைய அணுகுமுறையை கையாளுகிறார்கள். அந்த விதத்தில், சுமந்திரன் – சுரேன் அறிக்கை, வெளிப்படையான ஒரு விடயம். அந்த விதத்தில் அவர்கள் இருவரையும் பாராட்ட வேண்டும் ஆனால், அதோடு பாராட்டும் நின்று விட வேண்டும்.



சுமந்திரன்

### கூழுக்கு ஆசைப்பட்டு

சுமந்திரன் – சுரேன் அறிக்கையில் உள்ள பிரச்சினையே, இந்தியா ஒழுங்கு படுத்திய பதின்மூன்றாவது திருத்தம் தங்களுக்கு வேண்டாம் என்று கூறிக்கொண்டே, பிரதமர் நரேந்திர மோடி, தாங்கள் எதிர் பார்க்கும் தீர்வை, இலங்கை அரசிடம் இருந்து, தங்களுக்குப் பெற்று தரவேண்டும் என்று கூறுவதே. மோடி, இலங்கை வந்த சமயத்தில், தமிழர்களுக்கு, பதின்மூன்றிற்கு வெளியேயான தீர்வு குறித்து பேச்சு மூலம் தீர்வு எட்டப்படும் என்று அரச தலைமை உறுதி அளித்ததாக கூறியிருந்தார். இதுவே, தற்போது, இந்தியாவின் உதவியை நாடும் அனைத்துத் தமிழர் தரப்புகளும் முன் வைக்கும் வாதம்.

ஆனால், கூட்டமைப்பின் தலைமையும் பங்காளிக் கட்சிகளும் ஒரு விடயத்தை தங்கள் மக்களிடமிருந்தே மறைக்கிறார்கள். இனப்போருக்கு பிந்தைய காலகட்டத்தில், அன்றைய மஹிந்த ராஜபக்ஷ அரசுடன் அவர்கள், அரசியல் தீர்மானம் குறித்து பேச்சு நடத்தினார்கள். அதில் குறிப்பிட்ட முன்னேற்றமும் ஏற்பட்டது. வெண்ணை திரளும் போது தாழி உடைந்த கதையாக, அந்த குறிப்பிட்ட காலப் பகுதியில், அமெரிக்கா எழுப்பிய போர்க் குற்றங்கள் குறித்த கோரிக்கைகளை, கூட்டமைப்புத் தனதாகக் கையில் எடுத்துக் கொண்டதாலேயே, மஹிந்த அரசு, அரசியல் முடிவு குறித்த பேச்சுகளில் இருந்து பின் வாங்கியது.

அன்றைய சூழலில், போர்க் குற்றங்கள் குறித்து பேச்சு எடுத்தாலே, அரசியல் பேச்சுகளில் இருந்தும், அங்கு அரசு அளித்திருந்த வாக்குறுதிகளில் இருந்தும, ஆளும் ராஜபக்ஷாக்கள் பின் வாங்குவார்கள் என்பது கூட்டமைப்புத் தலைவர்களுக்கு நன்றாகவே தெரியும். எனவே, அரசியல் தீர்வும் வேண்டும், போர்க் குற்றங்கள் குறித்து விசாரணையும் வேண்டும் – என்று கருதும் தமிழர் தரப்பு அன்று எடுத்திருக்க வேண்டிய முடிவு ஒன்றுதான்.

அதாவது, அரசியல் தீர்வு குறித்து, தாங்கள் அரசுடன் பேச்சு நடத்தி, இரு தரப்பும் ஏற்றுக்கொள்ளக் கூடிய முடிவை பெற்றுக் கொள்வோம். போர்க் குற்றங்கள் குறித்து, சர்வதேச சமூகம் தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வர வேண்டும். – அதுவே, அரசியல் தீர்வு குறித்து, அரசு திடமான, காத்திரமான முடிவை எடுக்க வழி வகுத்திருக்கும். அந்தக் கட்டத்தை தாண்டிய பிறகு, அப்போதைய கள நிலைமையை அனுசரித்து, சர்வதேச சமூகம், போர்க் குற்றங்கள் குறித்த தங்களது கோரிக்கைகளை ஜெனிவாவிற்கு எடுத்து சென்று இருக்கலாம்.

ஆனால், நடந்தது என்ன? மாடுகளுக்கு முன்னர் வண்டியை கட்டுவது போல், அரசியல் தீர்விற்கு முன்னர், போர்க் குற்றங்களை முன்னிறுத்தி, கூட்டமைப்பு போராட்டங்களை முன்னெடுத்தது. இடையே, அன்றைய மன்னார் ஆயர் மறைந்த ராயப்பு ஜோஸப் தலைமையிலான தமிழ் சிவில் சமூகம் ஒன்றும், அரசுடனான கூட்டமைப்பின் பேச்சுகள் எந்தவிதத்திலும் வெற்றி பெற்றுவிடக் கூடாது என்று கங்கணம் கட்டிக் கொண்டு செயல்பட்டது.

இன்று, சுமார் பத்து ஆண்டுகள் கழிந்து, தமிழர்களுக்கு போர்க் குற்ற விசாரணை குறித்து எந்தவிதத் தெளிவான முடிவையும் சர்வதேசம் இன்னமும் அளிக்கவில்லை. தற்போது ஜெனிவாவில் கூடியிருக்கும் ஐ.நா. மனித உரிமை அமைப்பின் 49 ஆவது கூட்டத்திலும் எந்தவித முடிவும் எட்டப்போவதில்லை. உள்நாட்டில், அரசியல் தீர்வு குறித்தும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வழங்கிய உறுதிமொழி குறித்தும் எந்தவித மான பாரிய முன்னேற்றங்களும் ஏற்பட்டு விடவில்லை. தமிழர் நிலை, கூழுக்கு ஆசைப்பட்டு, மீசையை மழித்துக் கொண்டவன் கதையாக முடிந்துள்ளது.

இன்று, கொரோனா, தொடர்ந்து, பொருளாதார வீழ்ச்சி என்று, நாடு இருக்கும் நிலைமையில், தென்னிலங்கையில் தமிழர் தரப்பு முன் வைக்கும் பிரச்சினைகள் குறித்த கரிசனையும் கவலையும் எந்தத் தரப்பினரிடமும் இல்லை என்பதே உண்மை. பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் என்பது, அவர்களைப் பொறுத்த வரையில், தமிழர் தரப்பிற்கும் அப்பாற்பட்ட பொதுவான விடயம், எனவே, அதில் அரைகுறை பங்களிப்பு செய்கிறார்கள். இடைப்பட்ட காலத்தில், தற்போதைய பிரச்சினைகளில் இருந்து, தென்னிலங்கையைத் திசை திருப்பும் முயற்சியாக வேண்டுமென்றால், ஜனாதிபதி கோட்டா, புதிய அரசமைப்புச் சட்ட உருவாக்கம் குறித்து முக்கிய அறிவித்தல் எதனையாவது வெளியிடலாம். ஆனால், அதுவும் கிணற்றில் போட்ட கல்லாகவே இருக்கும்.

### குழந்தையையும் கிள்ளி விட்டு...



சுரேன் சுரேந்திரன்

இந்த பின்னணியில் தான், தமிழ் சமூகம், தற்போது, தமிழ் நாடு முதல்வர் ஸ்டாலினை முன்னிறுத்தி, சுமந்திரன் – சுரேன் தரப்பு வெளியிட்டுள்ள அறிக்கையை இலங்கை தமிழர் தரப்பு பார்க்க வேண்டும். அதாவது, தற்போதைய தமிழ் நாடு அரசியல் சூழலில், ஸ்டாலினையும் அவர் தலைமையிலான தி.மு.க. அரசையும் விட்டால், தங்களுக்கு போக்கிடம் இல்லை என்பதை இலங்கைத் தமிழர் தரப்பு ஏற்றுக் கொண்டுள்ளதாகவே அந்த இருவரின் கூட்டறிக்கை உணர்த்துகிறது.

தற்போது கூட, பதின்மூன்று உள்ளிட்ட இனப் பிரச்சினை கூறுகள் குறித்து, இந்திய மத்திய அரசிற்கு பொத்தாம் பொதுவாக ஓர் அழுத்தத்தைக் கொடுக்க வேண்டும் என்பதற்காக மட்டுமே, கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழர் தரப்பு தமிழ் நாடு அரசிற்குத் தலைமை தாங்கும் முதல்வர் ஸ்டாலினை உள்ளே ஈர்க்கப் பார்க்கிறது. இனப்பிரச்சினை விடயத்தில், இந்தியாவின் மத்திய அரசையே அவ்வப்போது ஆட்டிப் படைக்க நினைக்கும் கூட்டமைப்பு மற்றும் புலம் பெயர்ந்தோர் தரப்பிற்கு தாங்கள் ஒரு பொருட்டே இல்லை என்பது தமிழ் நாட்டின் திராவிட கட்சிகளுக்கு இப்போது நன்றாகவே புரிந்திருக்கிறது.

அந்த வகையில், தற்போதும், சுமந்திரன் – சுரேன் அறிக்கை உட்பட்ட இலங்கை தமிழர் தரப்பின், தமிழ் நாடு சார்ந்த பல்வேறு முன்னெடுப்புகள் எல்லாம், குழந்தையையும் கிள்ளி விட்டு, தொட்டிலையும் ஆட்டி விடும், தொடர் விளையாட்டின் ஒரு பகுதியே என்பதையும் திராவிட கட்சிகள் புரிந்து வைத்திருக்கின்றன. இல்லையென்றால், இனப் பிரச்சினையில் தங்களது ஆதரவைத் தேடி பல்வேறு முயற்சிகளை முன்னெடுக்கும் இலங்கை தமிழர் தரப்புகள், மீனவர் பிரச்சினை குறித்து ஏன் தமிழ் நாட்டின் அரச தலைமை மற்றும் திராவிட அரசியல் தலைமைகளைக் கலந்து ஆலோசிக்காமலே, தன்னிச்சையாக, தடாலடி முடிவுகளை எடுத்து வருகிறார்கள் என்ற கேள்வியும், தமிழ் நாட்டின் ஏதோ ஒரு மூலையிலாவது கேட்கத் துவங்கி உள்ளது.

இது காரணமாக, தங்களையும், தங்களது மக்களையும், வாக்கு வங்கிகளையும், இலங்கை தமிழர் தரப்பு கருவேப்பிலை போல கருதி அவ்வப்போது பயன்படுத்தி, பின்னர் தூக்கி எறிந்து விடுகிறது என்ற எண்ணம் திராவிடக் கட்சிகளிடையே தோன்றி கன காலம் ஆகி விட்டது. அதை வெளிப்படையாக பேசுவதற்கு அவர்கள் தயங்குகிறார்கள். காரணம், அதனால், எங்கே இலங்கையில் தமிழர் தரப்பினரின் நியாயமான தேவைகளும், அபிலாஷைகளும், கோரிக்கைகளும் கூட, உள்நாட்டில் வலுவிழந்து விடுமோ, என்ற கரிசனையே காரணம்.

### பகடை காய் பொலிட்டிக்ஸ்

அது போன்றே, புலம்பெயர்ந்த இலங்கை தமிழர் குழுக்கள் பலவும், தமிழ் நாட்டின் கொசுறு திராவிடக் கட்சிகளை பகடை காயாகவே பயன்படுத்தி வந்துள்ளன என்பது இப்போது அவர்களுக்கு உறைக்கத் துவங்கி உள்ளது. முதலில் எம்.ஜி.ஆர்., இடைப்பட்ட சிறிது காலத்திற்கு கருணாநிதி, என்று துவங்கி, பின்னர் வைகோ, டாக்டர் ராமதாஸ், திருமாவளவன், பின்னர் சீமான் என்று மாறிமாறி அரசியல் ஆதரவை வழங்கி வந்திருக்கும் புலம்பெயர்ந்தோரால், இலங்கை தமிழர் அரசியல் தரப்புகள் மீது, திராவிடக் கட்சிகளுக்கு ஒரு வித வெறுப்பு தோன்றி உள்ளது தவிர்க்க முடியாத விடயம்.

இதற்கான காரண – காரியங்கள் ஆயிரம் இருக்கலாம். இருதரப்பு நியாயங்களும் வாதங்களும் கூட இருக்கலாம். அவற்றை எல்லாம் ஆராய்ந்து பார்க்காமல், வெற்றி பெறும் குதிரைகளை விடுத்து, கிடைத்த குதிரை மீது பணம் கட்டி, தோல்வி அடைந்து வந்துள்ள புலம்பெயர்ந்தோர் கூட்டம், தங்களது தவறான தேர்வுகளுக்கு, தமிழ் நாடு அரசியலைக் குறை கூறி, அனைவரையும் ஒரு முகமாகத் தூற்றுவது போல் நடந்து வருகின்றனர்.

(11 பக்கம் பார்க்க)

உ
முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

# செவ்வழி நயனம்



# திருமுறைகள் கூறும் ஆகம வழிபாட்டு முறைகள்

ஆலய வழிபாட்டிலே வீபூதி, பஞ்சாட்சரம், உருத்திராக்கம், சிவ நந்தி வழிபாடுகள் முதன்மைப்படுத்தப்பட்டுள்ளன. ஒருவரது ஆன்ம ஈடேற்றத்திற்கு அவை மிகவும் முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன. சைவநாயன்மார்கள் அவற்றை பெருமைப்படுத்திக் கூறிப் பெருமைகொள்கின்றனர்.

"பூச இனியது நீறு" – சம்பந்தர்.

"பூசுவதும் வெண்ணீறு" – மாணிக்கவாசகர்.

"வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது நாதன் நாமம் நமச்சிவாயவே" – சம்பந்தர்.

"நற்றுணையாவது நமச்சிவாயவே" – அப்பர்.

"திருநீறும் ஐந்தெழுத்தும் செப்பாராகில்" – அப்பர்.

"நற்றவாஉனை நான் மறக்கி னும் சொலும் நா நமச்சிவாயவே" – சுந்தரர்.

"நமச்சிவாய வாழ்க" – மணிவாசகர்.

"கங்காளன் பூசும் கவசத் திருநீறு" – திருமந்திரம்.

– இவ்வாறு பல இடங்களில் திருநீறு, திருவைந்தெழுத்தின் பெருமைகளைக் கூறும் திருமுறைகள் சிவலிங்க வழிபாட்டையும் சிறப்பாகப் பேசுகின்றன.

பெரியபுராண ஆசிரியர் சேக்கிழார் சுவாமிகள் –

"காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய்
நீணாக மணிந்தார்க்கு நிகழ் குறியாஞ் சிவலிங்கம்"
(சாக்கிநாயனார் புராணம்) என்கிறார்.

"மலர்ந்த அயன்மால் உருத்திரன் மகேசன்
பலந்தரும் ஐம்முகன் பரவிந்துநாதம்
நலந்தரும் சக்திசிவன் வடிவாகிப்
புலந்தரும் லிங்கம் பராநந்தியாமே"
– என்கிறது திருமந்திரம் (தந்திரம் 07)

மேலும் லிங்கவழிபாட்டில் ஆன்மார்த்தமாக வழிபாடு செய்வதற்கு இலகுவாகக் கிடைக்கக் கூடிய பொருள்களை சிவலிங்கமாகக் கொள்ளலாம் எனவும் திருமூலர் குறிப்பிடுகிறார்.

"துன்றும் தயிர்,நெய்,பால், துய்ய மெழுகுடன்
கன்றிய செம்பு, கனல், இரதம்,சலம்
வன்நிறல் செங்கல், வடிவுடைவில் வம்,பொன்
தென்தியங்கு ஒன்றை தெளி சிவ லிங்கமே"

இறைவன் பஞ்சபூதங்கள் எனப்படும் நிலம், நீர். நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் ஐந்துடனும் தொடர்பு கொண்டுள்ளான் என்பதை ஆகம வழிபாட்டு நெறிகளில் காணலாம்.

இறைவனைப் பஞ்ச பூதங்களோடு தொடர்புபடுத்துகிறார் அப்பர் சுவாமிகள்

"இருநிலனாய் தீயாகி நீருமாகி இயமானனாய் எரியும் காற்றுமாகி" (அப்பர்) என்றும் –

"நில நீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன் புலனாய
மைந்தனோடு எண் வகையாய்ப் புணர்ந்து நின்றான்" – என்றும்

"வானாகி, மண்ணாகி, வளியாகி, ஒளியாகி" என்றும் கூறுகிறார் மணிவாசகர்.

இறைவனை வழிபடுவதற்கு பூவும், நீரும் சிறப்பானவையாகும்.

"கற்றுக் கொள்வன வாயுளநாவுள
இட்டுக் கொள்வன பூவுள நீருள" – அப்பர்.

"சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்" – அப்பர்.

"புக்கையாலாட்டிப் போற்றியென் னாத – இவ்
ஆக்கையால் பயனென்" – அப்பர்.

"வாசமலர் செய்திமையோர் நாடோறும் மலர் தூவ
விண்டமாமலர் கொண்டு விரைந்து நீர்
அண்டர்நாயகன் தன்னடிசூழ்மின்கள்
பண்டுநீர் செய்த பாவம் பறைந்திடும்
வண்டுசேர் பொழில் வான் மியூரீசனே"
– அப்பர்.

சைவப்புலவர் சிவஸ்ரீ
பாலஇந்திரக்குருக்கள் (MA)

# கோளறு பதிகம்



பாடல் - 04

**மதிநுதல் மங்கையோடு வடபால் இருந்து**
**மறையோதும் எங்கள் பரமன்**
**நதியொடு கொன்றைமாலை முடிமேல் அணிந்தென்**
**உளமே புகுந்த அதனால்**
**கொதியுறு காலன்அங்கி நமனோடு தூதர்**
**கொடு நோய்களான பலவும்**
**அதிகுணம் நல்லநல்ல அவைநல்ல நல்ல**
**அடியார் அவர்க்கு மிகவே.**

பொழிப்பு :

எட்டாம் பிறை போன்ற அழகிய நெற்றியை உடைய உமாதேவியாரோடு, வடதிசையில் ஆலமரத்தின் கீழ் தாம்பத்ய தக்ஷிணாமூர்த்தியாகத் தெற்குப் பார்த்து அமர்ந்து, சனகாதி முனிவர்களுக்கு வேதம் ஓதி அருள்பவரும், கங்கை நதியையும் கொன்றை மாலையை முடிமேல் சூடிக்கொண்டவருமான, மஹாதேவனான சிவனார் என் உள்ளமெனும் மாடக்கோயிலில் அமர்ந்து இருப்பதனால், கொதிக்கும் கோபம் கொண்ட எமதர்மனின் அமைச்சனான காலனும் அக்கினி பகவானும் எமதர்மராஜனும் அவனது தூதுவர்களும் அன்பே நிறைந்த குணமுடையவராயும், கொடிய நோய்கள் என்று காணப்படும் பலப்பல நோய்களும் முழுக்க முழுக்கக் குணமாகிப் போன நோய்கள் போலவே பணிந்து, படிந்து சிவனடியார்களை அண்டாமலேயே நல்லன, நல்லன, அவை நல்லன, நல்லனவே செய்வர்.

**ஒவியமும் விளக்கமும் :- பத்மவாசன்**
**(இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள வெளியீட்டிலிருந்து...)**



# நல்லைக் கந்தன் கழற்கோர் கவிமாலை

**தானதன தான தன்ன தானதன தான தன்ன**
**தானதன தான தன்ன - தனதான**

**கமல பாத மதைநி னைந்து கவின தாக அதைவ ரைந்து**
**கருவ ராத நிலையி தென்று - கருதாதே**
**கபட மான வழிதி ரிந்து கவிழு மோக வலைவி ழுந்து**
**கசட னாகி யுலவு கின்ற - நிலைமாறி**
**சகல யோக மதைவ ழங்கு சகல யோக மறைவ ணங்கு**
**சரண பாத மதைவ ணங்க - அறியாதே**
**சரச மாயை சுழிவி ழுந்து பரவி டாது உழலு கின்ற**
**தமிய னேனை விடுத லின்று - முறைதானே?**
**புகலு ஞான மதைவ ழங்கு தமிழ தான அடிநி னைந்து**
**புகழ தான கவிபு னைந்து - துதியேனோ?**
**புவியி லாடு மயில மர்ந்து பொலிவ தான அருளி லங்கு**
**புகழி னோடு பொருளி லங்க - பெறுவேனோ?**
**அகல மான அயில தன்தன் அமைவ தாக மலரி ழைந்த**
**அயில்வி மான மதில மர்ந்து - வருவோனே**
**அருளை வாரி பொலிய வந்த கருணை மேவு கடவு ளென்று**
**அடியர் நாளும் பரவு நல்லை - பெருமானே!**

– கவிஞர் இராசையா குகதாசன் –



# வக்ராசனம்

வாரம் ஓர் ஆசனம்

செய்முறை :

படி 1:– நேராக நிமிர்ந்து உட்கார்ந்து இரு கால்களையும் நீட்டவும், பாதங்கள் இணைந்திருக்க உள்ளங்கைகளை புட்டத்தின் இரு பக்க வாட்டிலும் தரை மீது ஊன்றியிருக்கட்டும். (ஆரம்ப நிலை)

படி 2:– வலது காலை மடக்கி வலப் பாதத்தை இடது தொடையின் அருகில் உட்புறமாக வைக்கவும். இடக்கால் நீட்டப்பட்டிருக்க வேண்டும்.

படி 3:– உடம்பை நன்றாக வலப்புறமாக திரும்பி இடக் கையை வலது முழங்காலின் வெளிப்புறமாக நீட்டி வலக் காலின் கணுக்காலைப் பிடிக்கவும். வலது உள்ளங் கையை உடம்பின் பின்புறம் தரையில் ஊன்றி பார்வை வலப்புறம் (பின்பக்கம்) இருக்கட்டும். உச்ச நிலையில் சாதாரணமாக சுவாசிக்கவும்.

படி 4:– இடது கையை விடுவித்து பின் வலது காலை நீட்டி இடக்காலுக்கு அருகில் வைத்து ஆரம்ப நிலைக்கு வரவும்.

குறிப்பு:– இது போல் மறுபுறமும் செய்க. (மாற்றாசனம்) அர்த்தமச்சேந்திராசனம் செய்ய முடியாதவர்கள் இதனை செய்யலாம்.

பலன்கள்: – முதுகெலும்பை மாறிமாறி நன்றாக முறுக்கேற்றி உரமேறச் செய்கின்றது. கீழ் முதுகு, முள்ளந்தண்டு வளையும் தன்மை பெற்று ஆரோக்கியமடைகின்றது. மார்புச்சளி, இடுப்பு வலி, முதுகுவலி நீங்கும். பெண்களுக்கு மாதவிடாய் கோளாறுகள் முதலிய உடலியல் ரீதியான பிரச்சினைகள் கட்டுப்படுத்தப்படும். அதிரீனல் சுரப்பி நன்கு வேலை செய்கின்றது. கர்ப்பம் சம்பந்தமான பிரச்சினைகள் இல்லாமல் போகும். சோம்பலை நீக்கி சுறுசுறுப்பை ஏற்படுத்தும். நீரிழிவு குணமாகும்.

- ஸ்ரீ. நதிபரன் - (யோகா போதனாசிரியர், நல்லூர் திவ்ய ஜீவன சங்கம்)

# அதியுச்ச அதிகாரப் பகிர்வுடன் கூடிய கட்டமைப்பு ஒன்றை பரிசீலிக்கத் தயார் என புலிகள் அரசுக்கு அறிவித்தார்கள்!

## தேசியத் தலைவரின் பிரதிநிதியாக நானே இதனை பிரேமதாஸவிடம் தெரிவித்தேன் என்கிறார் சி.வீ.கே.

**07.02.2022 ஆம் திகதி யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் கருத்துரை ஆற்றினார். அந்த உரையின் முழுமையும் இங்கு பிரசுரமாகிறது.**



இந்தக் கலந்துரையாடலின் தலைப்பு 13 ஆவது அரசியல் யாப்பு சீர்திருத்தத்தைப் பலப்படுத்தி அதன் மூலம் மாகாண சபையைப் பாதுகாத்தல். இந்த இரண்டு வார்த்தைகளிலும் மிக முக்கியமான கருத்து இழையோடுவதாக நான் பார்க்கிறேன். அதைப் பலப்படுத்தல் என்பது இப்போது இருக்கிற மாகாண சபை முறைமையினுடைய செயற்பாடுகளில் தேவையான பல வீனங்களை நீக்கி அதைப் பலப்படுத்துவது என்பது ஒரு வாதம். மாகாண சபையைப் பாதுகாத்தல், அந்த முறைமையைப் பாதுகாத்தல் என்று சொன்னால் அதற்கு ஏதோவொரு ஆபத்து இருக்கின்றது என்பது தெளிவுபடுகிறது. இந்த நாட்டின் அரசாங்கம் தற்பொழுது கசிய விட்டிருக்கின்ற கருத்து ஒரு புதிய அரசமைப்பு மூலமாக மாகாண சபை முறைமையை இல்லாதொழிப்பதற்கான எத்தனத்திலே இருக்கிறது என்பது தெளிவாகிறது. அதை நோக்கியதாக இந்தக் கலந்துரையாடல் அமைகின்றது.

நான் முதலிலே ஒன்றை தெளிவுபடுத்தி விட வேண்டும். நான் அரசியல் பேசமாட்டேன். பேசவும் தேவையில்லை. ஆனால் நான் இலங்கைத் தமிழரசுக் கட்சியினுடைய உறுப்பினராகவும், அந்தக் கட்சியினுடைய ஒரு சிரேஷ்ட உபதலைவராகவும் இருக்கிறேன்.

1949 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 18 ஆம் திகதி இலங்கைத் தமிழரசுக் கட்சி வரித்துக் கொண்ட இன்று வரை நிலையாகக் கடைப்பிடித்து வருகின்ற சமஷ்டிக் கோட்பாட்டின் கொள்கையிலிருந்து நாங்கள் எப்பொழுதும் விலகவில்லை. ஆகவே, அதுதான் எங்களுடைய இலக்கு, இலட்சியம், நோக்கம் என்பதை வலியுறுத்திக் கொண்டு என்னுடைய கருத்தை நான் சொல்ல விரும்புகின்றேன்.

இந்த மாகாண சபை முறைமை தொடர்பாக நீதிபதி விக்னராஜா சொன்னமை போல இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் ஊடாக அல்லது அதன் அடிப்படையில் எழுந்த ஒன்று என்று நாங்கள் பார்க்கின்றோம். அந்த மாகாண சபை முறைமை எந்தக் காலத்திலும் தமிழ்த் தேசிய இனத்தினுடைய அரசியல், அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதாக நாங்கள் மட்டுமல்ல தமிழ்த் தேசியம் சார்ந்த எந்தக் கட்சியும் ஏற்றுக் கொள்ளவில்லை. அது தெளிவாகவே இங்கே கூறப்பட்டது போல அமிர்தலிங்கம், சிவசிதம்பரம், சம்பந்தன் போன்றவர்கள் அப்பொழுது இந்த இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை நிறைவேற்ற முயலுகின்ற ராஜீவ் காந்திக்குத் தெளிவாக எழுத்து மூலம் தெரிவித்திருக்கிறார்கள்.

ஆகவே, மாகாண சபை முறைமை என்பது எங்களுடைய சமஷ்டிக் கோரிக்கைக்கோ அல்லது தன்னாட்சிக் கோரிக்கைக்கோ அல்லது தாயகக் கோரிக்கைக்கோ மாற்றீடானது அல்ல. அவ்வாறு நாங்கள் சிந்திக்கவும் இல்லை. இந்த இந்திய – இலங்கை ஒப்பந்தம் அதிலே இரண்டு மூன்று விடயங்கள் எங்களுக்கு மிகப் பெரிய சாதகமாக அமைகின்றது. அதிலே பந்தி 1.4 வடக்கு – கிழக்கு தமிழ்த் தேசிய மக்களுடைய தாயகம் என்பதை வரலாற்று ரீதியான தாயகமாக அங்கீகரிக்கின்றது. இது ஒரு சர்வதேச இரு தரப்பு ஒப்பந்தம். சர்வதேச சட்ட வலுவானது. அதிலே பந்தி 2.18 அதுதான் முக்கியமானது. நீதிபதி குறிப்பிட்டமை போல, மொழி சார்ந்தது. சிங்களம் உத்தியோகபூர்வ மொழியாக இருந்தாலும் தமிழும் ஆங்கிலமும் உத்தியோகபூர்வ மொழி ஆகும் என்ற ஏற்பாடு இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் பந்தி 2.18 இல் இருக்கிறது.

அதைத்தான் அரசமைப்பினுடைய 18 ஆவது உறுப்புரையிலேயே திருத்தமாக 13 ஆவது திருத்தினூடாகத்தான் அது அரசமைப்பிலே சேர்க்கப்பட்டுள்ளது. ஆகவே, 13 ஆவது திருத்தத்தை முழுமையாக ஏற்றுக்கொள்ளவில்லை. அல்லது நிராகரிக்கிறோம் என்று சொன்னால் இந்தத் தமிழ் மொழியினுடைய தேசிய அந்தஸ்து, அரச மொழி அந்தஸ்து மற்றும் 16 ஆவது திருத்தத்தின் மூலம் வடக்கு கிழக்கினுடைய நிர்வாக மொழியாக, அரச கரும மொழியாகத் தமிழை சட்டபூர்வமாக ஏற்றுக் கொண்டமையை நாங்கள் நிராகரிக்கிறோமா என்று நான் கேட்க விரும்புகின்றேன்.

ஆகவே, 13 ஆவது திருத்தம் என்பது. உண்மையாகத் தமிழ் மக்களுடைய அரசியல் இலக்கை அடைவதற்கான ஒரு கட்டமைப்பு அல்ல. அது என்னவென்றால் உலக வரலாற்று ரீதியிலே ஐக்கிய நாடுகள் கோட்பாட்டிலே எங்கெங்கெல்லாம் தேவை இருக்கிறதோ எந்த அளவுக்கு அரசியல் எங்கு பகிரப்பட வேண்டுமோ எந்த எல்லைக்கு அது கொண்டுபோகப்பட வேண்டுமோ என்றால் அந்த இடத்துக்கு அதிகாரத்தை சப்ஸிடியரிட்டி கோட்பாட்டின் அடிப்படையில் பகிரலாம். அல்லது பரவலாக்கலாம். அந்த அடிப்படையிலேயே எழுந்ததுதான் இந்த மாகாண சபைத் திட்டம், சட்ட ஏற்பாடு. ஆகவே, இது தமிழர்களுக்காகத்தான் ஏற்பாடு செய்தது என்றால் ஒருவேளை அப்படி சிந்தித்திருக்கலாம். ஆனால் நடைமுறையிலேயே எங்களுக்காக ஒரு சட்டம் என்றால் அது வடக்கு கிழக்குக்கு மட்டுமே இருந்திருக்கவேண்டும். அது அப்படி இருக்கவில்லையே. முழு நாட்டுக்கான ஊராட்சி முறைமைகள் போன்ற ஒரு சட்டம்தான் மாகாண சபை முறைமையும் அந்த சட்டமும். ஆகவே, இதைப் பெரிய அளவிலே அரசியல் தீர்வாகவும், ஏற்றுக் கொள்ளுவதன் மூலம் நாங்கள் அரசியல் தீர்வுக்கு மாறுபடுகின்றோம் என்னும் எதிர்க்கருத்து வலுவானதல்ல. இது ஒரு சாதாரண அதிகாரப் பரவலாக்கம், அதிகாரப் பகிர்வு சம்பந்தப்பட்ட ஓர் அதிகாரம்.

இந்த இடத்திலே ஒரு விடயத்தை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். பலருக்கு அநேகமாகத் தெரியாத விடயம். 1991 ஆம் ஆண்டு பிரேமதாஸவுக்கு எதிராகக் குற்றவியல் பிரேரணை நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட போது, அந்த நேரத்திலே விடுதலைப் புலிகள் பலமாக இருந்த காலம். அவர்கள் அதிலே தலையீடு செய்ய வேண்டும் என்று நினைத்தார்கள். ஒரு பேச்சை உருவாக்க விரும்பினார்கள். அந்த விடயத்திலே தேசியத் தலைவருடைய நேரடி வேண்டுகோளிலே அல்லது பணிப்புரையிலே நான் பிரேமதாஸவைச் சந்தித்த பொழுது, தேசியத் தலைவர் மூன்று விடயங்கள் சொன்னார். அதைச் சொல்ல விரும்பவில்லை. முக்கியமாக ஒரு விடயத்தைச் சொல்கிறேன். அரசியல் சம்பந்தமாக அவர் கேட்டால் நான் என்ன சொல்வது என்று நான் அவரிடம் கேட்டேன். அவர் எனக்குச் சொன்ன விடயம். அதியுச்ச அதிகாரப் பகிர்வுடன் கூடிய கட்டமைப்பு ஒன்றை நாங்கள் பரிசீலிக்கத் தயார் என்று சொல்லச் சொன்னார். இதற்கு பல அர்த்தம் இருக்கின்றது. அதை நான் பிரேமதாஸவுக்குச் சொன்னேன். We are prepred to Consider a structure that would, provide for optimum power sharing இதிலே ஒரு முக்கியமான ஒருவிடயம் இருக்கின்றது. அவர் எந்தக் கட்டமைப்பு என்று சொல்லவில்லை. அதை நாங்கள் ஏற்கிறோம் என்றும் சொல்லவில்லை. நாங்கள் பரிசீலிக்கத் தயார் என்பதுதான்.

இந்த இடத்திலே ஒரு விடயத்தை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். பலருக்கு அநேகமாகத் தெரியாத விடயம். 1991 ஆம் ஆண்டு பிரேமதாஸவுக்கு எதிராகக் குற்றவியல் பிரேரணை நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட போது, அந்த நேரத்திலே விடுதலைப் புலிகள் பலமாக இருந்த காலம். அவர்கள் அதிலே தலையீடு செய்ய வேண்டும் என்று நினைத்தார்கள். ஒரு பேச்சை உருவாக்க விரும்பினார்கள். அந்த விடயத்திலே தேசியத் தலைவருடைய நேரடி வேண்டுகோளிலே அல்லது பணிப்புரையிலே நான் பிரேமதாஸவைச் சந்தித்த பொழுது, தேசியத் தலைவர் மூன்று விடயங்கள் சொன்னார். அதைச் சொல்ல விரும்பவில்லை. முக்கியமாக ஒரு விடயத்தைச் சொல்கிறேன். அரசியல் சம்பந்தமாக அவர் கேட்டால் நான் என்ன சொல்வது என்று நான் அவரிடம் கேட்டேன். அவர் எனக்குச் சொன்ன விடயம். அதியுச்ச அதிகாரப் பகிர்வுடன் கூடிய கட்டமைப்பு ஒன்றை நாங்கள் பரிசீலிக்கத் தயார் என்று சொல்லச் சொன்னார். இதற்கு பல அர்த்தம் இருக்கின்றது. அதை நான் பிரேமதாஸவுக்குச் சொன்னேன். We are prepred to Consider a structure that would, provide for optimum power sharing இதிலே ஒரு முக்கியமான ஒருவிடயம் இருக்கின்றது. அவர் எந்தக் கட்டமைப்பு என்று சொல்லவில்லை. அதை நாங்கள் ஏற்கிறோம் என்றும் சொல்லவில்லை. நாங்கள் பரிசீலிக்கத் தயார் என்பதுதான்.

ஆகவே இந்தக் கட்டமைப்பு என்பது பெரிய விடயம் இல்லை. மாகாண சபை முறைமையிலே முழுக்க ஒன்றுமே இல்லை என்று சொல்ல முடியாது. அது ஓர் உள்ளூராட்சி மன்றத்துக்கு மேற்பட்டதாகப் பார்த்தோமானால் இலகுவாக அதனுடைய தேவை தெரியும். ஏன் சிங்கள தேசத்திலே அந்த இனவாதக் கருத்துடையவர்கள் கூட மாகாண சபை முறைமையை பாவிக்கிறார்கள். இன்றும் அவைத் தலைவர்களினுடைய இணையத்தில் நான் இருக்கிறேன். இன்றும் அவர்களைச் சந்திக்கிறேன். அவர்களும் இந்த முறைமை இருக்க வேண்டும் என்றுதான் சொல்கின்றார்கள். ஆளுநர் முறைமை வேண்டாம் என்றுதான் சொல்கிறார்கள். Provincal council system should exist என்று வலுவாகச் சொல்கிறார்கள். ஏனென்றால் இது அதிகாரப் பகிர்வு. அதனையே பிரதிபலிக்கிறது. அது தேவை. மத்திய மயப்படுத்தலுக்கு எதிராக நிற்கிறார்கள். நாங்களும் அந்த வகையிலேதான் இந்த மாகாண சபை முறைமையை மேலாகப் பார்க்க வேண்டும்.

ஆனால், எங்களைப் பொறுத்தவரையில் நாங்கள் மாகாண சபையில் இருந்த நானும், நடராஜா, தவராசா ஆகியோர் இந்த அவையில் இருக்கின்றோம்.

(11பக்கம் பார்க்க)

# வேட்புமனுவில் இளைஞர்களுக்கான 25 வீத ஒதுக்கீடு சட்ட ஏற்பாடுகோரி சட்டமா அதிபருக்கு விண்ணப்பம்!

## நாடாளுமன்ற செயலாளர் நாயகத்தால் அனுப்பிவைப்பு

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்காரால் தனி நபர் சட்டமூலமாக குறித்த சட்ட மூலம் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததோடு, அடுத்த கட்ட முன்னேற்ற நடவடிக்கைகாக நாடாளுமன்ற செயலாளர் நாயகத்தால் மேற்படி திருத்த சட்டமூலத்திற்கான சட்ட ஏற்பாடுகளை கோரி சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம்,

01.1946 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க உள்ளுராட்சி அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 28 ( 8 ) ( ஆ ) பிரிவு,

02. 1981 ஆம் ஆண்டின் முதலாம் இலக்க நாடாளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 15 ( 8 ) ( இ ) பிரிவு.

03. 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் 13 ( 8 ) ( இ ) பிரிவுகள் என்பனவற்றை திருத்தி புதிய ஏற்பாடுகளை உள்ளீர்ப்பதற்கான சட்ட ஏற்பாடுகளை கோரி சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

புதிய சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய, மேற்கூறிய சகல தேர்தல்களின் போதும் நியமனப் பத்திரத்தைச் சமர்ப்பிக்கும்போது தேர்தல் மாவட்டத்துக்குப் பெயர் குறித்து நியமிக்கப்படும் வேட்பாளர்களின் மொத்த எண்ணிக்கையில் நான்கில் ஒரு பகுதியினருக்குக் குறையாமல் இளைஞர் வேட்பாளர்களாக இருப்பதை ஒவ்வோர் அரசியல் கட்சியும் அல்லது சுயேச்சைக் குழுவும் உறுதிப்படுத்தல் வேண்டும்.

தேர்தல்கள் ஆணையாளரால் வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம் பெயர் நியமனங்களைக் கோரும் அதே வேளையில் ஒவ்வொரு நிர்வாக மாவட்டம் தொடர்பாகவும் பெயர் குறித்து நியமிக்கப்படவேண்டிய இளைஞர் வேட்பாளர்களின் எண்ணிக்கையை குறித்துரைக்கப்பட வேண்டும்.

ஓர் இளைஞர் என்பவர் தேர்தல்கள் ஆணையாளரால் தேர்தல்கள் கோரப்படும் தினத்தில் 35 அல்லது அதற்குக் குறைவான வயதான ஓர் ஆண் அல்லது பெண் என வரையறுக்கப்படுதல் வேண்டும். மற்றும் தேவையான நிபந்தனைகளை ஓர் அரசியட் கட்சி அல்லது சுயேச்சைக் குழு நிறைவேற்றுவதற்குத் தவறும் சந்தர்ப்பத்தில், அத்தகைய நியமனப்பத்திரம் வெற்றும் வெறிதுமானதாகக் கருதப்பட்டு தெரிவத்தாட்சி அலுவலரால் நிராகரிக்கப்பட வேண்டும் என்றவாறு அமையப் பெறும்.

# கிணற்றில் போட்ட கல் ........

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதுவும், திராவிடக் கட்சிகளுக்கு புரியாத விடயம் அல்ல.

இனப்போரின் உச்சகட்டத்தில் நடைபெற்ற இந்திய நாடாளுமன்றத் தோர்தலில், அன்று இலங்கை தமிழர் பிரச்சினைக்கு தமிழ் நாட்டில் கட்டியம் கூறி வந்த வைகோ தோல்வி அடைந்தமை, ஒரு முக்கிய செய்தியை கடல்களுக்கு அப்பாலும் அறிவித்தது. அன்று, வைகோ, ஜெயலலிதா தலைமையிலான அ.இ.அ.தி.மு.க. கூட்டணியின் சார்பில் தனது சொந்தத் தொகுதியான விருதுநகரில் போட்டியிட்டு, 15,000 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தார். அவரை எதிர்த்து வெற்றி பெற்ற ஆளும் தி.மு.க. கூட்டணியின் காங்கிரஸ் வேட்பாளர் மாணிக்கம் தாகூர், தமிழர் என்பதும், தமிழ் நாட்டிலேயே வாழ்பவர் என்பது கூட தொகுதி மக்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. என்றாலும், அவர் உலக பிரசித்தி பெற்ற வைகோ என்ற தமிழர் தலைவரை தோற்கடித்தார்.

அந்தத் தேர்தல் துவங்கி, தமிழ் நாடு வாக்காளர்கள், தொடர்ந்து, இலங்கை தமிழர் தரப்பிற்கு அறிவித்து வரும் செய்தி இதுதான், இனப்பிரச்சினை மட்டுமே, உங்களது ஒரே சமூக, அரசியல் மற்றும் தேர்தல் பிரச்சினை. கல்வி, மருத்துவ வசதி, தொழில் துறை மற்றும் வேலை வாய்ப்பு என்று சமூக நீதி சார்ந்து வளர்ந்து வரும் தமிழ் நாட்டு மக்களின் அன்றாட பிரச்சினைகளும், எதிர்பார்ப்புகளும் வேற லெவல். தொப்புள் கொடி உறவான உங்களது துன்பங்களுக்கு எங்களால் மருந்திட முடியும். ஆனால், அந்த துன்பங்களை எல்லாம், நாங்களும் பகிர்ந்து கொள்ளப் போவதில்லை. அதிலும் குறிப்பாக, நீங்கள் ஆட்டுவிக்கும் விதத்தில் எல்லாம், நாங்கள் ஆடப்போவதில்லை.

ஆனால், இந்த நிலைப்பாடு, சமூக நீதி கொள்கை என்பது என்ன என்று அறியாமலே, யாழ்ப்பாண சாதி அரசியல் புரையோடி உள்ள இலங்கை தமிழர் தரப்பு அரசியல் தலைமைகளுக்கும், அவர்களை அச்சு எடுத்து, வெளிநாடுகளில் கூட சமூக - அரசியல் செய்து வரும் புலம் பெயர்ந்தோருக்கும் புலப்படப் போவதில்லை. அதுவே இங்குள்ள அடிப்படை பிரச்சினை!



## புத்திகெட்ட மனிதர் எல்லாம் திரைப்படத்தில் பணியாற்றியவர்களுக்கான கௌரவிப்பு

புத்திகெட்ட மனிதர் எல்லாம் திரைப் படத்தில் பணியாற்றியவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் படக்குழுவினரின் நன்றி கூறும் நிகழ்வும் புதன்கிழமை நடைபெற்றது.

யாழ்.திவ்யமஹால் மண்டபத்தில் கடந்த புதன்கிழமை இரவு இந்த நிகழ்வு இடம்பெற்றது.

படத்தில் பணியாற்றியவர்களுக்கான கௌரவிப்புக்களும், பட உருவாக்கத்துக்கு உறுதுணையாக செயற்பட்டவர்கள், ஆதரவு அளித்தவர்களுக்கு நினைவு பரிசில்கள் வழங்கி நன்றியும் கூறப்பட்டது.

கடந்த வருட இறுதியில் ராஜ் சிவராஜ் இயக்கத்தில் வெளியான 'புத்திகெட்ட மனிதர் எல்லாம்' திரைப்படம் வசூல் ரீதியாகவும், விமர்சன ரீதியாகவும் நல்ல வரவேற்பை பெற்றது.

இந்தத் திரைப்படத்துக்கு 13ஆவது நோர்வே தமிழ்த் திரைப்பட விழாவில் 4 விருதுகள் கிடைத்தன.

சிறந்த நடிகை (சிந்துஜா), சிறந்த ஒளிப்பதிவாளர் (தர்மலிங்கம்), சிறந்த இசையமைப்பாளர் (பூவன் மதீசன்), சிறந்த திரைக்கதை (சிவராஜ்) ஆகிய விருதுகள் கிடைத்தமை குறிப்பிடத்தக்கது.

# அதியுச்ச அதிகாரப் பகிர்வுடன் கூடிய கட்டமைப்பு ஒன்றை ......

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாங்கள் செய்ய வேண்டியதை செய்யாமல் விட்டிருக்கிறோம் என்பது உண்மை. அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் நாங்கள் செய்யக் கூடிய பல விடயங்கள் அதிலே இருக்கின்றன. வெளியே தனியே பொலிஸையும் காணியையும் பற்றி நாங்கள் பேசிக் கொண்டிருக்கிறோம். அது தேவைதான். ஆனால் எவ்வளவு விடயங்கள் விவசாயம், உள்ளூராட்சி இப்படி எத்தனை விடயங்கள் அதிலே இருக்கின்றன. அதை நாங்கள் கையாளலாம். அதை இலங்கை பூராகவும் கையாள்வார்கள். நாங்கள் எங்களுடைய மக்களுக்காக, எல்லாக்கட்சி உறுப்பினர்களை உள்ளடக்கிய சபையிலேயே பரிசீலித்து பல விடயங்களை முன்னெடுக்கக் கூடிய வாய்ப்பு இருக்கின்றது.

ஆகவே, மாகாண சபை முறைமை என்பதை பெரும் அரசியலுக்குள்ளே புகுத்தி, இது தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு என்று சொல்லி, அதனாலே நாங்கள் சமஷ்டியை கைவிட்டிட்டோம் என்று சொல்கின்றனர். இது சமஷ்டிக்கு மாற்று அல்ல. சமஷ்டி முறைமையினுடைய அம்சங்கள் சில அங்கே உள்ளடக்கப்பட்டிருக்கின்றன என்பது உண்மை. அதிகாரப் பகிர்வினுடைய சில அம்சங்கள் அதிலே இருக்கின்றன என்பது உண்மை. இல்லை என்று சொல்ல முடியாது. ஆகவே, இருக்கின்றதை ஏன் நாம் விட வேண்டும். இல்லாமல் செய்ய வேண்டும் என்றால் அதுக்கு அடுத்தது என்ன? இந்த அரசாங்கம் புதிய அரசமைப்பைக் கொண்டு வருகிறதோ இல்லையோ என்று என்னால் சொல்ல முடியாது. நான் நினைக்கிறேன் வராது என்று. அது என்னுடைய கருத்து. வராது. ஒருவேளை வந்தால், அது எங்களுக்கு மிகப் பாதகமாக இருக்கும்.

ஆகவே, இருக்கிறதையும் இல்லாமல் செய்ய நாங்கள் முயல்கின்றமை தவறாகும். இந்த மாகாண சபை முறைமையை இலாவகமாக வினைத் திறனுடன் செயற்படுத்தக் கூடிய ஆற்றல் இந்த இனத்துக்கு இருக்கிறது. எங்களுடைய மக்களுக்கு அந்த ஆற்றல் இருக்கிறது. அந்த ஆளுமை எங்களிடம் இருக்கிறது. அதை நாங்கள் சில சமயங்களிலே செய்யவில்லை. அதுக்காக முறைமை தவறு என்று சொல்ல முடியாது. இது நாடாளுமன்றத்துக்கும் உள்ளூராட்சிக்கும் இடைப்பட்ட ஒரு Intermediary. அவ்வளவுதான். அது மாகாணம் சம்பந்தமானது. இன்றைக்கு தென்னிலங்கை என்ன சொல்கின்றது. மாகாண ரீதியான கட்டமைப்பை அவர்கள் விரும்பவில்லை. மாவட்டத்துக்கு நாங்கள் 1981 இல் போனவர்கள். ஏனென்றால் நாங்கள் தமிழ் மக்கள் பலமாக பேசக் கூடாது என்பதற்காக, உரிமைகளைப் பேசக்கூடாது என்பதற்காக, அதற்கான ஒரு கட்டமைப்பு இருக்கக்கூடாது என்பதற்காகவேதான் சிங்கள தேசம் மாகாண சபை முறைமையை நீக்க முயற்சிக்கின்றது. இதை நாங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

நான் பல இடங்களில் சொல்லியிருக்கிறேன். நாங்கள் கூடி அழுவதற்கு என்றாலும், கூடி பேசுவதற்கு என்றாலும், கூடிக் குறைகளைச் சொல்வதற்கு என்றாலும் ஒரு ஜனநாயகத் தளம் வேண்டும். அந்த ஜனநாயகத் தளம் மாகாண சபை முறைமைதான். அரசியல் அபிலாஷைகளுக்கு மாற்றீடு என்று நாங்கள் சொல்ல வரவில்லை. அரசியலில் இருக்கக்கூடிய தேவைகளை ஓரளவு சில விடயங்களை வெளிக்கொண்டு வரமுடியும். பேச முடியும், பேசிய கட்டமைப்பு. ஆகவே, இதனைப் பலப்படுத்துவது என்பது வேறு விடயம். பலப்படுத்தலாம், 13ஐப் பலப்படுத்தலாம். தேவைகள் இருக்கின்றன. குறைபாடுகள் இருக்கின்றன. அவற்றை நீக்கலாம். முயற்சி செய்யலாம். ஆனால் மாகாண சபை முறைமையைப் பாதுகாக்க வேண்டும் என்றால் It is a matter for the Parliament and the southern polity.

நாங்கள் ஒரு காலத்திலே என்னுடைய வயது அப்படியானபடியால் சில வரலாறுகள் எனக்குள் இருக்கின்றன. ஆரம்பத்திலே சமஷ்டி கேட்டபொழுது எங்கள் எல்லாரையும் சேர்த்து ஏளனம் செய்தவர்கள் இருக்கிறார்கள். இப்பவும் இருக்கிறார்கள். முந்தியும் இருந்தார்கள். கட்சிகள் இருந்தன. இன்றைக்கு எல்லாரும் நாங்கள் ஒரு சமஷ்டி முறைமையைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். அதுதான் எங்களுடைய இலக்கு. அதுதான் எங்களுடைய நோக்கம். அதுதான் எங்களுடைய அரசியல் எண்ணங்கள். நாங்கள் சரணடையவில்லை, கைவிடவில்லை. அப்படிஇருந்து கொண்டு இந்த இருக்கக்கூடிய 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல் செய்து அதிலுள்ள குறைபாடுகளை நீக்கச் சொல்லி, எங்களுடைய ஜனநாயக ரீதியிலான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

அதிலே ஒரேயொரு விடயம் தந்தை செல்வா - பண்டார நாயக்கா ஒப்பந்தம் 57 இல் தொலைந்ததும், அங்காலையும் எதிர்த்தார்கள். இங்காலையும் எதிர்த்தார்கள். இங்கும் வேண்டாம் என்றார்கள். அங்கும் வேண்டாம் என்றார்கள். கடைசியில் அந்த ஒப்பந்தம் கிழித்து எறியப்பட்டது. இதையேதான் நாங்கள் செய்கிறோமா? இதைத்தான் நாங்கள் செய்யப் போகிறோமா?. நாங்கள் பேசாமல் இருக்கலாமே. அவன் வேண்டாம் என்றால் அதுக்காகவோ அவர்களை நாங்கள் எதிர்க்க வேண்டாமா?, அதை அழிக்க வேண்டும் என்று சொல்கிறார்கள் என்றால் அதனை நாங்கள் எதிர்க்க வேண்டாமா?, அதில் எங்களுக்கு ஏதோ இருக்கிறது என்று ஊகித்துத்தானே அதைச் செய்கிறார்கள். அதைக் கூட எங்களால் உணர முடியவில்லையா?

இதற்கு மேல் நேரம் கருதி பேச விரும்பவில்லை. மாகாண சபை முறைமை என்பது இந்த நாட்டினுடைய அதிகாரப் பகிர்வு. ஏனென்றால் இந்திய - இலங்கை ஒப்பந்தமே எங்களுக்காக மட்டும் என்று சொல்லவில்லை. தேசிய நலன் சார்ந்தது என்றுதான் அதிலே இருக்கிறது. அதுக்காகத்தான் அது வந்தது. ஆனபடியால் 13 ஆவது திருத்தம் இருக்க வேண்டும். அதனாலேதான் இந்த மொழி உரிமை அரசமைப்புக்குள்ளே கொண்டு வரப்பட்டது. ஆகவே 13 ஆவது திருத்தம் பலப்படுத்தப்பட வேண்டும். மாகாண சபை முறைமை தொடர்ந்து வலியுறுத்தப்பட வேண்டும். பலப்படுத்தப்பட வேண்டும். திருத்தப்பட வேண்டும். மேன்மைப்படுத்தப்பட வேண்டும். அதனூடாக இந்த நாட்டில் முழு நாட்டுக்கும் ஓர் அதிகாரப் பகிர்வினுடைய முதற்படியாக, அதிகாரப் பகிர்வின் ஆரம்பப் புள்ளியாக இருக்கின்ற 13 ஆவது திருத்தத்தைத் தொடர்ந்து வலியுறுத்தி அதற்காக நாங்கள் நிற்கிறோம் என்ற ஒரு தெளிவான கருத்தை முன்வைத்து என்னுடைய கருத்துரையை நிறைவு செய்கிறேன். - என்று அவர் தனது கருத்துரையில் கூறினார்.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘இனப்படுகொலை’, ‘இனச்சுத்திகரிப்பு’ ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

## அங்கம் - 298

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**749.நம்பியவர் கெட்டாரா? நம்பாதவர் வாழ்ந்தாரா?**

எது என்பதை நீங்களே ஊகித்திருப்பீர்கள். அல்லது உணர்வுகளாவது உந்தும். உள்ளங் கைகளைப் பார்க்க கண்ணாடி தேவையில்லை. தனது அர்ப்பணிப்புக்களாலும் மரணத்தினாலும் சிவகுமாரன் வரலாற்று நாயகனானான். விடுதலைக்கு வித்திட்ட வீரனாக மட்டுமல்ல, தெய்வமாகவும் பார்க்கப்பட்டான்.

கவிஞர் காசி ஆனந்தன் பின்வருமாறு கூறுகிறார்:

நாயிலும் இழிவுற நின்றதுன் நாடு காண்!
நலிந்தார் மக்கள்!
ஆயினும் நின் பணி ஆற்றுவோம்! விடுதலை
அடைவோம்! ஆணை!
தாறுமாறாய் அழித்தனர் தமிழ் இனத்தினை
தறுக்கர் கண்டாய்!
நீறு படப் பகை அழியும் இனியும் போர்
நிகழ்த்துவோம் யாம்!
நஞ்சுண்டு நேற்று நீ நடத்திய போர்க்களம்
நலிந்தா போகும்?
அஞ்சுமா தமிழினம்? அடங்குமா தமிழ்ச்சினம்?
நெஞ்சில் நீ குடியிருந்தனை! உண்டு போர்!
நெடும் போர் உண்டு!

என்று உறுதிகள் தந்து, அந்த நெடும்போரும் நடந்தது. சிவகுமாரன் ஒவ்வொரு தமிழ் வீட்டுப் பிள்ளையுமா



பொன்.சிவகுமார்

னான். ஆனால் நம்பியவர்களின் ஏமாற்றங்களிலேதான் தன்னைக் காப்பாற்ற வேண்டாம், சாக விடுங்கள் என்று கேட்டான். இப்படி நம்பிக்கைகளைக் குலைப்பவர்களுடன் மீண்டும் உயிர்த்து இந்தப் பிறப்பில் சேர்ந்து பயணிக்க அவன் விரும்பவில்லை.

‘மீண்டும் பிறப்பேன்; விடுதலைக்குப் போராடுவேன்’ என்று கண்களை மூடினான். நம்பாதவர்களே தொடர்ச்சியாக வாழ வழிகள் அமைக்கும் போது, அவன் எந்தப் பிறப்பில் வந்து தமிழீழத்துக்காகப் போராடுவான்? அதுவும் இந்த தமிழ் மக்களுக்கு?


**750.எல்லோர் வீடுகளுக்கும் பிள்ளையான சிவகுமாரன் தமிழீழ விடுதலைப் புலிகளால் மாவீரனாக ஏன் ஏற்றுக் கொள்ளப்படவில்லை?**

இவை விடுதலைப் புலிகளின் ஆரம்ப ஊற்றுக்களை ஒட்டியது. பலரால் பலவாறாக ஆராயப்பட்டது. இன்று வரை விடுதலைக்காக தமது உயிர்களை நீத்த எல்லோரும் மாவீரர்களாகப் பார்க்கப்பட வேண்டும் என்பதை மறுத்து விடுதலைப் புலிகளின் நியாயங்கள் கூறப்பட்டன. அந்த நியாயங்கள் இன்றைய அரசியலுக்கும் (விடுதலைக்கல்ல) மிண்டு கொடுக்கின்றன. பிரபாகரன் தான் ஒரு இராணுவ தலைமை அதிகாரியாக, ஒரு தேசிய இயக்கத்தைக் கட்டியெழுப்பி, தலைமைத்துவத்தை தனக்கென்று தீர்மானித்தமையால், அதற்கு முன்னான வரலாற்றைக் கணக்கெடுக்காது விட்டிருக்கலாம். அன்றில் அதற்கு விரும்பாமலிருந்திருக்கலாம். சிவகுமாரனை தன்னுயிர் ஈந்த முதலாவது மாவீரனாக ஏற்றுக் கொள்ள முயற்சிகள் எப்பொழுதுமே நடைபெற்று வந்தன. இவை பற்றிய வரலாற்றின் ஒரு பங்குக்காகவும் முழுமைக்காகவும் சிலவற்றைக் குறிப்பிடுகிறேன்.

நிருத்தகுமார் ( நிருத்தன்) மானிப்பாயைச் சேர்ந்தவர். ஆரம்ப காலங்களிலிருந்தே சிவகுமாரனோடு இணைந்து செயற்பட்டு, மாணவர் பேரவையின் போராட்டங்களிலும் ஈடுபட்டு, சிறையிலடைக்கப்பட்டவர். மீண்டும் மீண்டும் சிறைப்பட்டு சித்திரவதைகளுக்கு ஆளாக, 1977 ஆம் ஆண்டு காலங்களில் பிரான்ஸில் அடைக்கலம் புகுந்தவர். அவர் ஒரு செவ்வியில் சிவகுமாரன் மூன்று விடயங்களில் மிக உறுதியாக இருந்தான் என்று தெரிவிக்கிறார். ஒன்று – தமிழீழம் என்ற தனி நாடு அமைப்பது. இரண்டாவது – ஆயுதப் போராட்டத்தின் மூலமே அந்த இலக்கை அடைய முடியும். மூன்றாவது – கட்சி அரசியலுக்கு அப்பால் ஒரு தேசிய விடுதலை இயக்கத்தைக் கட்டியெழுப்புவது.

மூன்றாவது முயற்சிகளிலேயே 1970 இல் ஆரம்பிக்கப்பட்ட தமிழ் மாணவர் பேரவையும், 1973 தமிழ் இளைஞர் பேரவையும், 1974 இல் புதிய தமிழ் புலிகள் அமைப்பும், 1975 இல் தமிழீழ விடுதலை இயக்கமும், அவற்றைத் தொடர்ந்து மற்ற விடுதலைக் குழுக்களும் பிறந்தன. இந்த விடுதலைக் குழுக்களைக் கட்சி அரசியலுக்கும் நாடாளுமன்ற ஆசனங்களுக்கும் உதவி செய்யப் பாவிப்பதை நிறுத்தி ஒரு தேசிய விடுதலை இயக்கமாக கட்டியெழுப்ப வேண்டிய தேவையான முனைப்புக்களுக்கு ஆதரவு கேட்ட காலங்களிலேயே, தமிழரசுத் தலைவர்களிடமிருந்து அவன் பெற்ற ஏமாற்றங்களையும், இந்தத் தலைவர்களின் விடுதலைப் பற்றற்ற போக்குகளாலேயே தமிழீழம் அழிந்துவிடும் என்று கருத்தையும் தன்னுடன் இணைந்திருந்தவர்களிடம் அவன் பகிர்ந்தான்.

வைத்தியர் சத்தியநாதன் சிகிச்சைக்கென்று பொலிஸாரைத் தவிர்த்து ஏற்படுத்திய அறையில் நித்தி, புஷ்பராஜா போன்றவர்கள் அவனுடன் பேசியபோதும் அவன் ஆஸ்பத்திரியை விட்டு வெளியேற விரும்பவில்லை. தான் சாகவே விரும்புகிறேன் என்று விடாப்பிடியாய் இருந்தமையால் அவனோடு இயங்கிய இரண்டு மாணவிகளை அனுப்பி அவர்களது பேச்சையாவது கேட்பான் என எண்ணினார்கள். இதற்கும் சிவகுமாரன் மறுத்து விட்டு, அவர்களுக்குத் தான் போராட்டத்தில் சந்தித்த ஏமாற்றங்கள் போதும், இந்தப் பிறப்பில் திரும்பவும் பிழைத்து அதனையே காண விரும்பவில்லை, எப்படித்தான் பாடுபட்டாலும் நாய்களின் வாலை நிமிர்த்த முடியாது, ஆகவே தன்னை சாக விடும்படியும், தான் மீண்டும் பிறந்து வந்து போராடுவேன் என்றானாம். இவை நம்பியவர்களிலிருந்து பெற்ற விரக்தியின் வெளிப்பாடா, தனது இலட்சியம் இப்படியான போக்குகளால் கலைக்கப்பட்டுவிடும், அதனைக் காண்பதை விட செத்து மடிந்து விடலாம் என்ற எண்ணமோ, எதுவோ தான் இறப்பதால் விடுதலை புத்துயிர் ஊட்டப்படும் என்ற எண்ணம் இருந்தது. அதே சமயம் நாய் வால்களைப் போல், தமிழ் மக்களது அரசியலைத் திருத்த முடியாது



பிரபாகரன்



காசி ஆனந்தன்

என்று கணிப்பு, தனது அனுபவங்களால் சிவகுமாரனுக்கு அப்பொழுதே இருந்தது.

**751.விடுதலைப் புலிகள் சிவகுமாரனை மாவீரனாக ஏற்றுக் கொள்ள நிருத்தன் போன்றோர் எடுத்த நடவடிக்கைகள் என்ன?**

நிருத்தன் 1977 இலேயே பிரான்ஸில் புகலிடம் கேட்டு அகதியாக இருந்ததால் பின் வந்தவர்களுக்கு முன்னோடியாகவும் அவர்களுக்கு உதவி செய்தும் வந்தவர். அத்தோடு பிரான்ஸ் மற்றைய அயல் ஐரோப்பிய நாடுகளில் புகலிடம் கோரியிருந்த மாணவர் பேரவை, இளைஞர் பேரவை சகாக்களோடும் தொடர்பாக இருந்து வளரும் விடுதலை இயக்கங்களுக்கு ஆதரவு தந்து கொண்டு இருந்தவர்கள். வைகுந்தவாசன் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவை (Tamil Co-ordinating Committee) ஐ நிறுவிய பின்னர் தனக்குப் பரிச்சயமான பிரான்ஸின் வக்கீலொருவரின் உதவியோடு அதனைப் பாரிஸில் பதிந்து இயங்கிக் கொண்டிருந்த வேளைகளில் அவர்கள் ஊடாக சிவகுமாரன் மாவீரனாகக் கருதப்பட வேண்டும் என சமர்ப்பணங்களும் நேரடி பேச்சுவார்த்தைகளும் நடத்தப்பட்டாலும் இவைகள் தள்ளிப் போடப்பட்டன. பின் இவை பிரான்ஸ் மற்றும் ஐரோப்பிய நாடுகளின் இளைஞர்களது தீர்மானமாகக் கேட்கப்பட்ட போதும் அதற்கும் காரணங்களின்றி விடயம் பிற்போடப்பட்டது. இடையில் மேலும் பல புகலிடக் கோரிக்கையாளர்களின் வருகையால் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவும் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களின் ஆளுமைக்குள் வர நிருத்தனின் பணிகளே கேள்விக்குள்ளாக்கப்பட்டன. விடுதலைப் புலிகளின் தீர்மானங்களை அவர் போன்றோர் – ஒருங்கிணைப்புக் குழுவின் பாரிஸ் அமைப்பாளரானாலும் கூட – கேள்விக்குட்படுத்த முடியாதென்றும் குழுவின் தீர்மானங்களும் நாட்டிலிருந்து விடுதலைப் புலிகளின் கட்டளைப்படியே நடத்தப்படும் எனவும் பலவந்தப்படுத்தப்பட்டதால் தானும் அவர்களிடமிருந்து அன்னியமாகி விட்டேன் என்று கூறுகிறார்.

சிவகுமாரனை மாவீரனாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று பேச்சுக்கள் நிறுத்தப்பட வேண்டும் எனவும் சொல்லப்பட்டதாம்.

(வளரும்)

காலைக்கதிர்
Kalaikkathir

# பழிவாங்கலைக் கோரவில்லை நீதியைத்தான் வேண்டுகிறோம்!

## சர்வதேச சமூகத்தின் கடப்பாட்டை நினைவூட்டி சம்பந்தன் எடுத்துரைப்பு



**தமிழர்களாகிய நாம் பழிவாங்கலை நாடவில்லை. மாறாக பொறுப்புக்கூறல், நல்லிணக்கம், மீள்நிகழாமை மற்றும் தொடரும் மனித உரிமை மீறல்கள் இடம்பெறாமல் தடுக்கப்படுகின்றமை போன்றவற்றை உறுதி செய்யுமாறே வேண்டுகின்றோம்.உண்மை நிலைநாட்டப்படவேண்டும் என வலியுறுத்துகிறோம். உண்மை உறுதி செய்யப்படாமல் நீதி நிலைநாட்டப்பட முடியாது.**

**- இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான.இரா. சம்பந்தன்.**

'இலங்கை தொடர்பான ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அவ்வறிக்கைக்கான இலங்கை அரசின் பதில் அறிக்கையும் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த பின்னணியில் இவ்விடயம் தொடர்பில் சில முக்கிய காரணிகளை குறிப்பிடுவது முக்கியமானதாகும்.' - என்று தெரி வித்து சம்பந்தன் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதன் முழு விவரம் வருமாறு:-

சிறப்பு நிபுணர் குழுவின் அறிக்கையில், குறிப்பாக இறுதி யுத்த கட்டத்தில் நம்பத்தகுந்த சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமைகள் மீறல்கள் இடம்பெற்றன எனவும் அவை தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு உண்மை உறுதி செய்யப்படவேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமை ஆணையாளரின் உள்ளக விசாரணையும் இதனையொத்த ஒரு முடிவிற்கு வந்துள்ளது.

இலங்கையின் தற்போதுள்ள அரசாங்கமும் முன்னைய அரசாங்கங்களும் இதுவரை எந்தவொரு விசாரணையையும் முன்னெடுக்கவில்லை. முன்னைய அரசாங்கம் முன்மொழிந்த பொறுப்புக்கூறலை உறுதி செய்யும் வகையிலான கலப்பு பொறிமுறை அடங்கிய இணை அனுசரணை பிரேரணையிலிருந்து தற்போதைய அரசாங்கமானது விலகிக்கொண்டது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் ஒட்டுமொத்த பரிந்துரைகளை அரசாங்கம் நடைமுறைப்படுத்தவில்லை.

இலங்கை அரசாங்கமானது சுதந்திரம் அடைந்தது முதல் நீண்டகாலமாக ஆழமான தண்டனை விலக்குக் கலாச்சாரத்தில் ஊறியுள்ளது. இது தமது அரசியல் பலத்தை தொடர்ந்தும் தக்க வைப்பதற்காக - சிங்கள, பௌத்த பேரினவாதத்திற்கு ஆதரவளிக்கும் முகமாக - உள்ளக வாக்குறுதிகளை மதிக்காமலும், அதன் விளைவாக கொடுத்த வாக்குறுதிகளை செயல்படுத்துவதிலும் சரியான முடிவுகளை எடுப்பதிலும் அல்லது வேறெந்த ஒரு விடயத்திலும் தீர்மானம் எடுக்கும் நிலைகளில் தாக்கத்தினை ஏற்படுத்துகிறது.

எல்லா அரசாங்கங்களும் தொடர்ந்தும் அதிகாரத்தில் இருப்பதற்காக பேரினவாதத்தினை ஆதரிக்கும் கொள்கைகளை முன்னிறுத்திவந்துள்ளனர். இது, இலங்கை நாட்டிற்கு பாரிய பாதகங்களை கொண்டு வந்துள்ளதுடன் ஒருமித்த இலங்கை நாட்டின் மக்களையும் இது பாதித்துள்ளது. உண்மைநிலைமையை சிங்கள பௌத்த மக்களிற்கு எடுத்து கூறினால் அவர்கள் நிலைமையை புரிந்து கொள்வார்கள், ஆனால் ஒரு சில சிங்கள தலைவர்களை விட ஏனையவர்களிற்கு இதனை செய்வதற்கு தைரியம் இல்லை. இலங்கை முகங்கொடுத்துள்ள வரலாறு காணாத பிரச்சினைக்கும் மீண்டெழுந்து வரமுடியாத நிலைமைக்கும் இதுவே பிரதான காரணமாகும்.

இதேவேளை ஆயுதமேந்தாத பாதிப்பிற்குள்ளான தமிழ் மக்களின் நிலைமையை குறிப்பிடுவது முக்கியமானதாகும். இவர்கள் யுத்தத்தினால் பாதிப்பிற்குள்ளானவர்கள். ஏனையோர் பாதிப்பிற்குள்ளாக்கப்பட்டவர்கள். ஏனையவர்கள் பாதுகாப்பு படையினரிடம் சரணடைந்தவர்கள்.

மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் மீறப்பட்டு பாதிப்படைந்த இந்த மக்கள் மனித உரிமை பேரவையின் தீர்மானத்தினை நடைமுறைப்படுத்த வேண்டுகிறார்கள்.

இவர்கள் பழிவாங்கலை நாடவில்லை. மாறாக பொறுப்புக்கூறல், நல்லிணக்கம், மீள்நிகழாமை, மற்றும் தொடரும் மனித உரிமை மீறல்கள் இடம்பெறாமல் தடுக்கப்படுகின்றமை போன்றவற்றை உறுதி செய்யுமாறே வேண்டுகின்றனர்.

அவர்கள் உண்மை நிலைநாட்டப்படவேண்டும் எனக் கோருகின்றனர்.

உண்மை உறுதி செய்யப்படாமல் நீதி நிலைநாட்டப்பட முடியாது.

இலங்கை ஐக்கிய நாடுகளின் சர்வதேச உடன்படிக்கைகளை ஏற்று கொண்டுள்ளது. அத்தகைய உடன்படிக்கைகளை நடைமுறைப்படுத்துவது இலங்கையின் பொறுப்பாகும்.

இதனை செய்ய தவறுவதானது தற்போது நிலவும் தண்டனை விலக்கை உறுதி செய்வதாகவே அமையும்.

தற்போதைய இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாடும், ஐக்கிய நாடுகள் சபையின் பிரேரணை மற்றும் சர்வதேச சமூகத்தின் நடவடிக்கைகள் போன்றன இலங்கையில் எது நடந்தாலும் அது ஒரு உள்ளக நிகழ்வாகவும், இறையாண்மை தொடர்பான விடயமாகவும் அதில் வெளித் தலையீடுகள் இருக்க முடியாது எனவும் எண்ணுவதற்கு தூண்டுகிறது.

இலங்கையின் தண்டனை விலக்குக் கலாச்சாரமானது சர்வதேச மட்டத்திற்குக் கொண்டுசெல்ல வேண்டிய தருணத்தை எட்டியுள்ளது.

சொந்த மக்களது இறையாண்மை மதிக்கப்பட்டு, அவர்கள் சுய மரியாதை மற்றும் கௌரவம், சமத்துவம் மற்றும் நீதி, மேலும் மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்களில் இருந்து பாதுகாக்கப்படுகின்ற போதுதான் ஒரு நாட்டின் இறையாண்மை புனிதத்துவம் பெறுகின்றது என்பதனை குறிப்பிட வேண்டும். ஆனால் இலங்கையில் வாழும்தமிழ்மக்கள் இத்தகைய நிலைமை இல்லாத நிலையில் அரைவாசிக்கும் மேலதிகமானவர்கள் கடந்த தசாப்தங்களில் பல்வேறு நாடுகளில் குடியேறியுள்ளனர்.

இந்நிலைமை தொடர்ந்தால், செழுமையான மொழியையும், கலாச்சாரத்தினையும், நாகரிகத்தினையும், பாரம்பரியத்தினையும் கொண்ட தமிழ் மக்கள் இலங்கையில் இல்லாமல் போய்விடுவார்கள். தமிழ் மக்கள் தமது பூர்வீகமான வடக்கு கிழக்கு பிரதேசங்களில் ஒன்றிணைந்த, பிரிவுபடாத இலங்கையில்,அர்த்தமுள்ள அதிகார பிரயோகத்துடன் தொடர்ந்தும் வாழ விரும்புகிறார்கள். இது உறுதி செய்யப்படவேண்டியது அடிப்படையாகும்.

தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் இந்த நிலைமைக்கு தமீழீழ விடுதலைப் புலிகளேகாரணம்எனகூறுகின்றனர். ஆனால், சுதந்திரத்திற்குப் பின்னர் தமிழ் மக்களிற்கெதிரான கலவரங்கள் இடம்பெறாமல் இருந்திருந்தால், தமிழ் மக்களை இலங்கை அரசாங்கத்தின் பாதுகாப்பு படையினர் பாதுகாத்திருந்தால், இலங்கை பிரதமர்களிற்கிடையிலும் தமிழ் தலைவர்களிற்கிடையிலும் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தால், தமிழ் மக்களின் சார்பில் தமீழீழ விடுதலைப் புலிகள் தோன்றியிருக்கமாட்டார்கள் என்பதனை குறிப்பிட வேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபைக்கும் சர்வதேச சமூகத்திற்கும் இது தொடர்பில் ஒரு பொறுப்பு உள்ளது.

சமாதானமும் மீளநிகழாமையும் இந்த விடயங்கள் யதார்த்தமாக தீர்க்கப்படவேண்டும் என வலியுறுத்துகின்றன.
- என்று உள்ளது

---

### மறைந்த ஊடகத்துறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உயிருடன் இல்லாத நிலையில் அவருக்கான சிறப்புப் பட்டம் அவரது தயாரிடம் நேற்று வழங்கப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக ஊடகத்துறையில் சிறப்புத் தேர்ச்சிக்காக வழங்கம்படும் மறைந்த ஊடகத்துறை மாணவன் சகாதேவன் நிலக்ஷன் ஞாபகார்த்த தங்கப் பதக்கமும் குறித்த மாணவிக்கே வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

---

### மட்டக்களப்பிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த விழிப்புணர்வுப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதில் கலந்துகொண்டவர்கள் தீப்பந்தங்களை ஏந்தியிருந்தனர்.

---

### மூத்த விரிவுரையாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விபத்தில் உயிரிழந்தார்.

கோப்பாய் இராச வீதி கிருஷ்ணன் கோவில் சந்தியில் நேற்று இரவு 7 மணியளவில் இடம்பெற்ற விபத்திலேயே இவர் உயிரிழந்தார்.

கரவெட்டியில் உள்ள வீட்டிலிருந்து இரவு கல்வியியல் கல்லூரியில் நடைபெறவிருந்த நிகழ்வு ஒன்றில் கலந்து கொள்வதற்காக இவர் வருகை தந்த போது வீதியில் வெளிச்சம் இன்றி நிறுத்தப்பட்டிருந்த உழவு இயந்திர பெட்டியுடன் மோதி விபத்து நேரிட்டதாகத் தெரியவருகிறது.

---

### விமலின் கதிரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொண்டார்.

ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத் அவர்களும், இதன்போது இணைந்துகொண்டார்.

கைத்தொழில் அமைச்சுப் பதவியை வகித்த விமல் வீரவன்ஸ, அமைச்சரவையில் இருந்து நேற்று நீக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

---

### யாழில் மின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாட்டில் தற்போது பரவலாக பல மணி நேர மின்சாரத் தடை அரசால் மேற்கொள்ளப்படுகின்ற நிலையில் மக்களின் பாதிப்பை வெளிப்படுத்தும் வகையில் இந்தப்போராட்டம் ஒழுங்குபடுத்தப்பட்டது.

இந்த எதிர்ப்புப் போராட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், யாழ்ப்பாணம் மாநகர மேயர் விஸ்வலிங்கம் மணிவண்ணன், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான கே. சயந்தன், ச.சுகிர்தன், உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

---

# மேல் நீதிமன்ற நீதிபதிகளாக 13 பேருக்கு புதிய நியமனம்!

## தமிழர் ஒருவரும் அதில் இல்லை

கொழும்பு, மார்ச் 04

மேல் நீதிமன்ற நீதிபதிகளாக நியமிக்கப்பட்ட 13 பேருக்கு ஜனாதிபதி செயலகத்தில் வைத்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று நியமனக் கடிதங்களை வழங்கி வைத்தார்.

சேவை மூப்பு சிரேஷ்ட நிலையின் அடிப்படையில் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டன என்று ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்தது. இந்த 13 புதிய மேல் நீதிமன்ற நீதிபதிகளில் ஒருவர் கூடத் தமிழர் இல்லை.

காலைக்கதிர் Kalaikkathir

## மீண்டும் எரிவாயு தட்டுப்பாடு வரும்

எரிவாயுவை இறக்குமதி செய்து விநியோகம் செய்யும் நடவடிக்கைகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

லிற்றோ மற்றும் லாப் எரிவாயு நிறுவனங்களால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறக்குமதிக்கான நாணய கடிதங்களைத் திறப்பதற்கு வங்கிகள் அனுமதி வழங்காமையால் இவ்வாறு எரிவாயு விநியோக நடவடிக்கைகள் பாதிப்படைந்துள்ளன எனக் குறிப்பிடப்படுகின்றது.

## சர்வதேச நாணயநிதியம் இலங்கைக்கு ஆலோசனை

நாட்டின் பொருளாதாரத்தில் ஸ்திரத் தன்மையை ஏற்படுத்திக் கொள்வதற்காகவும், கடனை குறைத்துக்கொள்வதற்காகவும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நடைமுறையொன்றை உடனடியாக அமுல்படுத்துமாறு இலங்கைக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையுடனான கருத்துப்பரிமாற்றத்தைத் தொடர்ந்தே சர்வதேச நாணய நிதியம் இவ்வாறு ஆலோசனை வழங்கியுள்ளது.

அத்துடன், சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபை, இலங்கையுடன் கட்டுரை 4 இன் கீழ், கருத்துக்களை பரிமாற்றிக் கொள்ளும் நடவடிக்கைகளை நிறைவு செய்துள்ளதாகவும் இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மின்சாரம் துண்டிப்பு, வாழ்க்கைச்சுமை அதிகரிப்பு; கினிகத்தேனையில் எதிர்ப்புப் போராட்டம் முன்னெடுப்பு





எரிபொருளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு, மின்சாரம் துண்டிப்பு மற்றும் வாழ்க்கைச் சுமை அதிகரிப்பு ஆகியவற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்து, அட்டன், கினிகத்தேனை நகரில் நேற்று (வியாழக்கிழமை) போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

ஜே.வி.பியினர் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் அந்தக் கட்சியின் அமைப்பாளர்கள், ஏற்பாட்டாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றிருந்தனர்.

எரிபொருள் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்கு உடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும், தடையின்றி மின்சாரம் வழங்கப்பட வேண்டும் எனப் போராட்டக்காரர்கள் வலியுறுத்தியமையுடன் நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமைக்கு அரசே பொறுப்புக்கூற வேண்டும் எனவும் வலியுறுத்தினர். 'ஏழரை மணிநேர மின்சாரம் துண்டிப்பால் சிறு முயற்சியாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். தொழில் நடவடிக்கைகள் ஸ்தம்பித்துள்ளன. இதற்கிடையில் எரிபொருளும் இல்லை. அதனால் சாரதிகள் உட்படப் பல துறையினரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே நாட்டில் பல பிரச்சினைகள் உள்ள நிலையில், இப்படியான பிரச் சினைகளால் மக்கள் மீண்டெழ முடியா துள்ளது.- எனவும் போராட்டக்காரர்கள் சுட்டிக்காட்டினர்.

# யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் பிரதமரின் பிரதிநிதியாக கீதநாத் காசிலிங்கம்!

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் பிரதமரின் பிரதிநிதியாக கீதநாத் காசிலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் செயற்பட்டு வரும் நிலையில் அவருக்கு எதிராக பொதுமக்களால் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு பல முறைப்பாடுகள் பிரதமர் அலுவலகத்துக்குக்கிடைக்கப்பெற்றதையடுத்து யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் பிரதமரின் பிரதிநிதியாக கீதநாத் காசிலிங்கம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் இணைப்புச்



செயலாளரான கீதநாத் காசிலிங்கம், வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான விசேட மீள் குடியேற்ற ஒருங்கிணைப்பாளராகவும் செயற்பட்டு வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## இணைய வழியான நிகழ்ச்சித் தொடர்

நூலக நிறுவனத்தால் நிகழ்த்தப்படும் இணைய வழிநிகழ்ச்சித் தொடர் வரிசையில் 30 ஆவது நிகழ்வாக 'மகளிர் மையவாதச் சிந்தனைகளோடு இணையும் ஆவணப்படுத்தல்' எனும் தலைப்பிலான கலந்துரையாடல் 05.03.2022 சனிக்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம்பெறும்.

இக்கலந்துரையாடலை சரோஜா சிவச்சந்திரன் வளவாளராகக் கலந்து கொள்வார். ஒருங்கிணைப்பாளராக றஞ்சனி பத்மநாதன் (றஞ்சி ஊடறு) அவர்கள் செயற்படுவார்.

இணைப்பு https://us02web.zoom.us/j/81415584070

Zoom Meeting ID : 81415584070

## இரண்டாவது நாளாக நேற்றும் தொடர்ந்தது சுகாதார தொழிற்சங்கங்களின் போராட்டம்!

சம்பள முரண்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து சுகாதாரத் தொழிற்சங்கங்கள் நேற்று இரண்டாவது நாளாகவும் நாடாளாவிய ரீதியில் தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுத்தன.

இதன்படி, தாதியர்கள், வைத்திய ஆய்வுகூட நிபுணர்கள், மருந்தாளர்கள் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் இவ்வாறு தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனிடையே, தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையின் நாளாந்த சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

நோயாளர்கள் மருந்துகளைப் பெற்றுக்கொள்ள பாரிய சிரமத்துக்கு முகம்கொடுத்தனர். வைத்தியசாலையில் அவசர சிகிச்சை, மகப்பேறு என்பன வழமை போல் இயங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் வைத்தியசாலைகளில் மருந்து வழங்கும் நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டதுடன் நோயாளிகள் ஏமாந்து சென்றனர். ஏழை நோயாளிகள் நீண்ட தூரத்தில் இருந்து வந்தும் சிகிச்சை பெற முடியாமல் அவதிப்பட்டனர். நோயாளிகளுக்கான அனுமதி குறைக்கப்பட்டுள்ளதால் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு வரும் நோயாளியின் எண்ணிக்கை குறைந்துள்ளமையைக் காண முடிந்தது.

## பரசிட்டமோல் வில்லையொன்றின் அதிகபட்ச சில்லறை விலை நிர்ணயம்

500 மில்லிகிராம் பரசிட்டமோல் வில்லையொன்றின் அதிகபட்ச சில்லறை விலை 2 ரூபா 30 சதமாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டுள்ளது.

2022 பெப்ரவரி 28 முதல் அமுலுக்கு வரும் வகையில் சுகாதார அமைச்சால் இந்த அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

# தேசிய கால்பந்தாட்ட வீரர் டக்சனின் பூதவுடல் இலங்கை வந்தடைந்தது



மாலைதீவில் கடந்த மாதம் 26ஆம் திகதி உயிரிழந்த இலங்கை தேசிய கால்பந்தாட்ட வீரர் டக்சன் பியூஸ்லஸ் இன் பூதவுடல் நேற்று வியாழக்கிழமை அதிகாலை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக இலங்கை வந்தடைந்தது.

இந்த நிலையில் பூதவுடல் பிரேத பரிசோதனைக்காக நீர்கொழும்பு வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பூதவுடலை பெற்றுக் கொள்ள அவருடைய மனைவி மற்றும் குடும்பத்தினர் நீர்கொழும்பு வைத்தியசாலைக்கு சென்றுள்ளனர்.

சடலப் பரிசோதனையின் பின் பூதவுடல் மனைவியிடம் ஒப்படைக்கப்பட உள்ள நிலையில் உடல் யாழ்ப்பாணத்துக்கு அஞ்சலிக்காக எடுத்துச் செல்லப்படும்.

எதிர்வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமை மன்னார் பனங்கட்டுக் கொட்டில் உள்ள அன்னாரது இல்லத்துக்கு அஞ்சலிக்காக வைக்கப்பட்டு. அன்றைய தினம் யாழ்ப்பாணத்திலிருந்து மன்னார் வரும் வழியில் பூநகரி, முழங்காவில், தேவன் பிட்டி போன்ற இடங்களைச் சேர்ந்த கால்பந்தாட்ட கழக வீரர்கள் அவருடைய உடலுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக பவனியாக எடுத்து வரப்படும்.

எதிர்வரும் திங்கட்கிழமை மாலை மன்னார் பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.03.2022இல் வெளியிடப்பெற்றது.